இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 34 சோபகிருது வருடம், ஆடி மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(08.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 20, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st August to 31st August 2023
DISCOUNT 15% (On selected models only) Cash or Card
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# விவசாயிகளிடம் மண்டியிட்டது அரசு!

## நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை விநியோகிக்க அமைச்சரவை முடிவு



வறட்சியான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான நீரை நீர்த்தேக்கங்களிலிருந்து விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (07) மாலை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கும் அங்கிருந்து விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக்காகவும் தேவையான அளவு நீரை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய மின்சாரத் தேவைக்கு மாற்றுத் தீர்வுகளைக் காணும் அதேவேளையில் சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயத் தேவைகளுக்காக தேவையான அளவு நீரை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார்.

பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீரை நீர்த்தேக்கத்திலிருந்து விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதபட்சத்தில், விவசாய, எரிபொருள் அமைச்சர்களின் இல்லங்களை முற்றுகையிடப் போவதாகவும் கொழும்பில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தவுள்ளதாகவும் விவசாயிகளின் எதிர்ப்பு வெளிவந்த நிலையில் அரசாங்கத்தின் இந்த அதிரடி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி, சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கு நாளொன்றுக்கு 3.5 மில்லியன் கியூபிக் மீற்றர் நீர் இன்று (08) முதல் விவசாய தேவைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

## திருமலை விமான விபத்தில் அதிகாரிகள் இருவர் பலி!

### விசாரணைகளுக்காக விசேட குழு நியமனம்



இலங்கை விமானப்படையின் பயிற்சி விமானமொன்று திருகோணமலை, சீனக்குடா விமானப்படை தளத்தில் வைத்து நேற்று (07) விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானப்படை... 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...




## 13ஆவது திருத்தம் தொடர்பான ஜனாதிபதி ரணிலின் உரை நாளை

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (09) பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் உரைகுறித்து எதிர்க்கட்சிகள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

இதேவேளை, 13ஆவது அரசியலமைப்பு குறித்து பாராளுமன்றத்தில் விளக்கம் பெறுவதற்கு எதுவும் இல்லை என்பதை ஜனாதிபதி நன்கறிவார். இருந்தபோதும், உள்நோக்கத்துடனேயே இந்தத் திருத்தம் தொடர்பான கருத்துகளை பேசுபொருளாக்க அவர் முயற்சிக்கிறார். மக்களின் கண்களை மூடி நாட்டிலுள்ள உண்மையான நெருக்கடி நிலைமையை மூடிமறைக்க ஜனாதிபதி முயற்சிக்கக் கூடாது என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (07) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,... 02 பக்கம்

## 12 மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு



நாட்டிலுள்ள 12 மாவட்டங்களைச் சேர்ந்த 40 பிரதேச செயலாளர் பிரிவுகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் (ஓய்வு) சுதந்திர ரணசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு முழுவதும் இதுவரையில் 12 மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த 12 மாவட்டங்களில் 40 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பவுசர்களினூடாக குடிநீர் வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

காட்டுப்பகுதிகளிலுள்ள மிருகங்களுக்கும் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. அதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். வறட்சியினால் 48 ஆயிரம் வரையிலான... 02 பக்கம்



சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்கவின் அழைப்பின்பேரில், இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று (07) கேகாலை மாவட்டத்தில் உள்ள பாடசாலை மற்றும் முன்பள்ளி சிறுவர்களை சந்திக்கும் கண்காணிப்பு பயணத்தில் இணைந்துகொண்டிருந்தார்.

### உஷ்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் எவரையும் களமிறக்காமல் தற்போதைய ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவை வழங்குமாறு பொதுஜன பெரமுனவின் ஒரு சாரார் கோரிக்கை விடுத்துள்ளதால் புதிய சர்ச்சையொன்று கிளம்பியுள்ளதாம்.

ரணிலுடன் இணைந்து செயற்படும் பொதுஜன பெரமுன எம்.பிக்கள் குழுவே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல். பெரமுனவிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவும் இந்த எம்.பிக்கள் குழு தயாராக இருப்பதாக தகவல். இந்த கோரிக்கையால் பெரமுன மேலிடம் அதிர்ந்து போயுள்ளதாம்.

## துறைமுக நகருக்கு ஒழுங்குவிதிகள்

### வெளியானது அதிவிசேட வர்த்தமானி



கொழும்புத் துறைமுக நகரம் தொடர்பான புதிய ஒழுங்குவிதிகளை உள்ளடக்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## மின் கட்டணம் அதிகரிக்காது

### காஞ்சன திட்டவட்டம்



நடப்பாண்டில் மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது. அரசாங்கத்தின் கொள்கைக்கமைய, வருடாந்த கட்டண மறுசீரமைப்பு அடுத்த ஜனவரி மாதமே இடம்பெறும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தை இணைக்கும் 150 கிலோமீற்றர் தொலைவுப் பாதை பிரச்சினைக்கு பொது இணக்கப்பாடு ஏற்படுமாக இருந்தால், நான்கு நாட்களில் அந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

02 பக்கம்

## வறட்சியால் வில்பத்து தேசிய பூங்கா விலங்குகளும் அவதி



02பக்கம்

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தக் கோரிக்கை



நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில், மின்சாரத்தின் தேவை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## ராஜபக்ஷக்கள் யாரென்பது எனக்கு நன்றாகத் தெரியும்

### மைத்ரி வீறாப்புப் பேச்சு



ராஜபக்ஷக்கள் தொடர்பில் மக்கள் அறிந்து வைத்துள்ளதைவிட, தனக்கு அவர்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் தெரியுமென்றும் புதிதாக நூற்றுக்கணக்கான சட்டங்களை உருவாக்கினாலும் ரகர் வீரர் வசீம் தாஜுதீன் போன்றோரின் கொலை வழக்கு தொடர்பான ஆதாரங்கள், தற்போது இருப்பில் இருக்குமென தான் நம்பவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்... 02 பக்கம்

## வறட்சியினால் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 04 மாகாணங்கள் பாதிப்பு



வறட்சி காரணமாக 04 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் வறட்சி காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 02 பக்கம்

## 76 சதவீதமான சிறார்கள் அதிகளவான வெப்பத்தாக்கத்துக்கு ஆளாகும் நிலை

யுனிசெப் மதிப்பாய்வின்படி, ஏனைய அனைத்துப் பிராந்தியங்களுடனும் ஒப்பிடும்போது, தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்ப நிலை தாக்கத்துக்குள்ளாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தெற்காசியாவில் 18 வயதுக்குட்பட்ட சுமார் 460 மில்லியன் சிறார்கள் அதிக வெப்பநிலைக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக தெற்காசியாவில் 04 சிறார்களில் 03 பேர் ஏற்கனவே அதிக வெப்பநிலை தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். 02 பக்கம்

# 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கடும்போக்கு அரசியல்வாதிகளின் கருத்துகளால் தென்னிலங்கை மக்கள் அச்சமடையத் தேவையில்லை

## கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்



ஒரு நாட்டில் கிராமிய வீதிகள் என்பது மிகவும் முக்கியம். பொருளாதார வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் கிராமிய வீதிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. தற்போதிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக, கிராமிய வீதி அபிவிருத்திக்கான கோரிக்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது.

எனினும், கிராமிய வீதி அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம். அதேபோல் வரும் ஒக்டோபர் மாதத்தின் பின்னர் வெளிநாட்டு நிதிகள் மூலம் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அதிகமான கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் இருக்கிறது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த முயற்சி எடுத்து வருகின்றார். பாராளுமன்றத்தில் வடக்கு மற்றும் கிழக்கு, மக்கள் பிரதிநிதிகளிடம் 13 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து கருத்துகளைக் கேட்டறிந்தார். அண்மையில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து கட்சிகளையும் அழைத்து சர்வகட்சி மாநாடு ஒன்றையும் நடத்தினார். ராஜீவ் – ஜே. ஆர். ஜயவர்தன ஆகியோர் அன்று 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை கொண்டுவந்தபோது அன்றைய அமைச்சரவையில் ஒரு அமைச்சராக அங்கம் வகித்த தற்போதைய ஜனாதிபதி, இந்த அதிகாரப் பகிர்வுப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை முன்வைப்பார் என்று எனக்கு நம்பிகை இருக்கின்றது." என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துகளை வெளியிடும் அதே நேரம், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும், எமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்துகளை முன்வைக்கின்றனர். இவை இரண்டுமே இரு தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். 13ஆவது அரசியலமைப்பை அமுல்படுத்துவதில் மிதமான போக்குடன் இருதரப்பும் சுமுகமான கலந்துரையாடல்களை நடத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதே இந்நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது என்றும் தெரிவித்தார். 13ஆவது அரசியலமைப்பின் ஊடாக வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் உள்ளார். ஆனால் இதில் பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வதில் மட்டும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் தீர்வுகாண முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகளைப் போன்றே தெற்கில் உள்ள கடும்போக்குவாத சில சிங்களத் தலைவர்கள் வெளியிடும் தீவிரக் கருத்துகளால் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் இவை பெரும்பாலும் அரசியல் நோக்கங்களில் கூறப்படலாம் என்றும் குறிப்பிட்ட அமைச்சர், இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் நம்பிக்கை வைத்து செயற்படுவதன் மூலமே இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். அவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

13 ஆவது திருத்தத்தை செயற்படுத்தத் தேவையான பரிந்துரைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அதன்படி, கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் தமது கருத்துகளை முன்வைக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிராமிய வீதி அபிவிருத்தி என்பது கல்வி, பொருளாதாரம் போன்ற பல்வேறு விடயங்களின் முன்னேற்றத்துக்கு மிக முக்கிய காரணியாக அமைகின்றது. ஆனாலும் நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் இவ்வாறான அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்குவது சிரமமாக இருந்தாலும், தற்போது அமைச்சில் உள்ள நிதியைக் கொண்டு முடியுமானவரை வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் பல்வேறு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்று அமைச்சு திட்டமிட்டுள்ள எதிர்கால அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பாக கப்பற்றுறை, உற்பத்தித் துறை, சுற்றுலா வலய மேம்பாடு, ஏற்றுமதி பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு, மீன்படி மற்றும் உள்நாட்டில் பயிரிடக் கூடிய தானியங்களைப் பயிரிடல் போன்ற பல்வேறு பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் முந்திரி பயிர்ச்செய்கையை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும், முறையாக பயன்படுத்தப்படாமல் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான அரச காணிகளை இதற்காக பயன்படுத்தவுள்ளதாகவும், இத்திட்டத்துக்கு வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# நானுஓயாவில் கத்திக்குத்து

## இருவர் பொலிஸில் சரண்

நானுஓயா பிரதான நகரில் இரு சகோதரர்களுக்கிடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தை தொடர்ந்து இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று(07) இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்த வர்த்தகர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வர்த்தக நிலைய வாடகை மற்றும் பணம் கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்த மோதல் இடம்பெற்றதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

கத்தியால் குத்தியவர்கள் இருவரும் சகோதரர்கள் எனவும் இவர்கள் இருவரும் தானாகவே நானுஓயா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பம்பலப்பிட்டியில் துப்பாக்கிச் சூடு

## நால்வர் கைது

கொழும்பு – பம்பலப்பிட்டி (மெரைன் டிரைவ்) வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் கார் ஒன்றை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நேற்று(07) நடத்தப்பட்டுள்ளது.

வேன் ஒன்றில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த கடத்தல்காரர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மெரைன் டிரைவ் வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள குறுக்கு வீதியொன்றில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது குறித்து மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

### 13ஆவது திருத்தம்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (09) பாராளுமன்றத்தில் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார். எங்களுக்கு கிடைத்துள்ள தகவலுக்கமைய, பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களையும் அமல்படுத்தும் நோக்கம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அந்த வேலைத்திட்டத்துக்கு பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பையும் அனுமதியையும் பெற்றுக் கொள்வதே அவரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அந்த நோக்கத்திலேயே புதன்கிழமை பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்த ஜனாதிபதி எதிர்பார்த்திருக்கிறார்.

எந்த பொருளும் இல்லாத வேலைத்திட்டமாகவே இதனை நாங்கள் கருதுகிறோம். இது கண்ணைக் கட்டும் வகையிலான செயற்பாடாகும். இதுதொடர்பில் பாராளுமன்றத்துக்கு எந்த கடமையும் இல்லை. 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்பது அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும். ஆகவே, அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பதை பாராளுமன்றம் தீர்மானிப்பதற்கு எதுவும் இல்லை. அரசியலமைப்பு என்பது நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதில் 13 ஆவது அரசியலமைப்பு என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும்.

அவ்வாறு இருக்கையில் இந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பதை நிறைவேற்றுத் துறையின் பிரச்சினையை பாராளுமன்றத்துக்கு உட்படுத்துவது முழுமையாக கவனத்தை திசைத்திருப்பும் செயற்பாடாகும். இது தொடர்பில் நிறைவேற்று பிரிவினரே தீர்மானிக்க வேண்டும்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் விளக்கம் பெறுவதற்கு எதுவும் இல்லை என்பை ஜனாதிபதியும் நன்கறிவார். உள்நோக்கங்களுடனேயே ஜனாதிபதி செயற்படுகிறார். விவசாயிகள் அதரவற்றவர்களாக இருக்கிறார்கள். இதற்கு அப்பால் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் நாளுக்கு நாள் உருவாகி வருகின்றன. இந்த பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காகவே ஜனாதிபதி 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நாட்டின் பிரதான பேசுப்பொருளாக மாற்ற முயற்சிக்கிறார் என்றார்.

### துறைமுக நகருக்கு...

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் இந்த ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வர்த்தமானியில் தெரிவித்துள்ளார்.

இது கடந்த 04ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதுடன் அதில் துறைமுக நகர அபிவிருத்தி கட்டுப்பாடுகள், முதலீட்டு முறைகள், வியாபார செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பின்வரும் கட்டளைகளுள் ஏதேனுமொன்றைத் திருப்திப்படுத்துகின்ற கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பினுள் ஒரு காணித்துண்டைக் குத்தகைக்கு எடுத்து அபிவிருத்தி செய்வதற்கு முதலீடொன்றைச் செய்கின்ற வியாபாரத்தில் துறைமுக நகரத்தின் அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், செயல்நுணுக்க முக்கியத்துவமான ஆரம்ப வியாபாரமாகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், செயல் நுணுக்க முக்கியத்துவமான இரண்டாம்நிலை வியாபாரமாகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும்.

அதன்படி, குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளானது சர்வதேச வியாபாரத்தில் உலகளாவிய மற்றும் பிராந்தியப் பொருளாதாரச் செயற்பாடு, கப்பற்றொழில் முகாமைத்துவத் தொழிற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழிலும் நிதியும், தகவல் தொழில்நுட்பவியல், வியாபார வழிமுறையில் வெளியாட்களை பணிக்கமர்த்தல் முறை, கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் தொழிற்பாடுகள், பிராந்திய விநியோகிப்புத் தொழிற்பாடுகள், சுற்றுலாப்பயணமும் வேறு துணைநிலையான சேவைகளும், புத்தாக்கம், தொழிற்றுறை உரிமையாண்மை, களியாட்டம், தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவித்தல், நிலைபெறுதகு அபிவிருத்தி அல்லது வதிவிடச் சமுதாயமொன்றைக் குடியமர்த்துவதில் நகர வாழ்வசதித் தொழிற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 12 மாவட்டங்களில்

குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. ஒரு இலட்சத்து 56 ஆயிரம் பேருக்கு நீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. கடந்த இரு நாட்களில் குடிநீர் விநியோகத்துக்காக 02 மில்லியன் ரூபா வரையில் நிதி செலவிடப்பட்டுள்ளது. தேவையுள்ள இடங்களுக்கும் குடிநீர் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 76 சதவீதமான சிறார்கள்...

உலகளவில் ஜூலை மாதம் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாகும். தெற்காசியாவில் உள்ள நாடுகள் தற்போது உலகில் அதிக வெப்பமானவை அல்ல. ஆனால், தெற்காசியாவில் நிலவும் வெப்பம், மில்லியன் கணக்கான பாதிக்கப்படக்கூடிய சிறார்களின் உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருவதாக யுனிசெபின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக சிறார்களிடையே நோய்கள் பரவக்கூடிய அதிக வாய்ப்புகள் உள்ளதாக சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதன் காரணமாக, தாய்மார்கள், சிறார்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார். அதேநேரம், நீர் அருந்தாமல் சிறுவர்கள் பாடசாலை உள்ளிட்ட வெளியிடங்களுக்கு செல்லும்போது, அவர்கள் அசௌகரியத்துக்குள்ளாக நேரிடும்.

இதனை தவிர்த்து கொள்வதற்காக, அதிக நீரை அருந்துதல், இளநீர், தோடம்பழம், மற்றும் எலுமிச்சை உள்ளிட்ட பானங்களை எடுத்துக்கொள்வது போன்ற அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

### வறட்சியால் வில்பத்து...

கடும் வறட்சி காரணமாக வில்பத்து தேசிய வனப்பூங்காவில் உள்ள சிறிய ஏரிகள் பலவற்றில் நீர் வற்றியுள்ளது. வில்பத்து தேசிய வனப் பூங்காவில் கிட்டத் தட்ட 106 ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளன. ஏறக்குறைய இவற்றில் பெரும்பாலானவை காய்ந்து போனதுடன், வில்பத்து தேசிய வனப் பூங்காவில் வசிக்கும் விலங்குகளுக்கு குடிநீர் கிடைக்காமல் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளன. இது தொடர்பில், வில்பத்து தேசிய வனப் பூங்காவின் காப்பாளர் சுரங்க ரத்நாயக்கவிடம் கேட்டபோது, தேசிய வனப்பூங்காவில் சுமார் 106 சிறிய ஏரிகள் உள்ளதாகவும் அவற்றில் ஐம்பது வீதமானவை கடும் வறட்சி காரணமாக வறண்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

### வறட்சியினால்

குறித்த 04 மாகாணங்களில் 28ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 89ஆயிரத்து 408 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தின் கிண்ணியா, சேருவில, குச்சவெளி, வெருகல், மூதூர், கோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவுகளில் 2ஆயிரத்து 746 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 976 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமேல் மாகாணத்தில் குருணாகல், பமுனகொட்டுவ, கிரிபாவ பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை நாட்டுக்கு போதியளவு மழைவீழ்ச்சி கிடைப்பதற்கான சாத்தியமில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

### திருமலை விமான விபத்தில்...

அதிகாரிகள் இருவர் உயிரிழந்துள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கெப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்தார்.

விபத்து தொடர்பில் ஆராய விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சீனக்குடா இலங்கை விமானப்படைத் தளத்தில் அமைந்துள்ள இல 01 விமான பயிற்சி படைப் பிரிவுக்குரிய Pay -6 ரக விமானம், விமான பரிசோதனைக்காக நேற்று (07) காலை 11.25 மணியளவில் சீனக்குடா விமான ஓடுபாதையில் பயணித்திருந்தது.

இந்நிலையில், 11.27 மணியளவில் சீனக்குடா விமானப்படை தள பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போதே விமானத்தில் பயணித்த இரு அதிகாரிகளும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக விமானப்படை ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த விபத்துக்கான காரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

### ராஜபக்ஷக்கள் யாரென்பது...

தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் மின்னேரியா தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ராஜபக்ஷக்கள் நாட்டை எவ்வாறு ஆட்சி செய்தார்கள், தற்போது என்ன செய்கிறார்கள் என்பதை, மக்களை விட அவர்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் எனக்கு தெரியும். பாராளுமன்றத்தில் அண்மையில், இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பில் புதிய சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. அதற்கு பாராளுமன்றத்திலுள்ள சகலரும் அதனை ஏகமனதாக நிறைவேற்றினார்கள்.

எமது உரையின்போது, நீதி அமைச்சரிடம் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் திருடர்கள், கொலை செய்தவர்கள், ஊழல் செய்தவர்களுக்கு தண்டனை கிடைக்குமா? என்றும் கடந்த இரு வருடங்களில் வழக்கு விசாரணை தீர்ப்புகள் கிடைப்பதற்கான காலம் நெருங்கிவந்தபோது அவர்களை விடுதலை செய்ததை போன்று இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரும் அவ்வாறு விடுதலை செய்ய முடியுமா என்றும் கேட்டேன்.

அதற்கு அவர், கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் தாக்கம் செலுத்தும் வகையிலேயே ஜனாதிபதி தயாரித்துள்ளதாகவும் கடந்த காலங்களில் இடம்பெற்ற சகல குற்றச்சாட்டுகளையும் இந்த சட்டத்தினூடாக மீள் விசாரணைக்கு எடுத்து தீர்ப்பளிக்க முடியும் என்றும் பதிலளித்தார்.

ஆனால், வசந்த விக்ரமதுங்க, ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் போன்றவர்களை புதைத்த இடத்திலிருந்து மீட்டு எடுக்க முடியாது. நான் அறிந்த வகையில், அவர்களின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை அறிக்கைகளை எதிர்கால விசாரணைகளுக்காக தற்போது எடுத்துக்கொள்ள முடியாது. அவை தற்போது இருப்பில் இல்லை. 2019ஆம் ஆண்டின் பின்னர் அவற்றை இல்லாமலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

காருக்குள் வைத்து தீ வைத்தே ரகர் வீரரை கொலை செய்தார்கள். ராஜ குடும்பத்தின் இளவரசரொருவரை காதலித்த பெண்ணொருவரை அவர் காதலித்தார் என்று கூறியே அவரை கொலை செய்தார்கள். தீ வைக்கப்பட்ட தாஜுதீனின் உடற்பாகங்கள் கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

நான் சுகாதார அமைச்சராக இருந்த காலப்பகுதியில் களுத்துறை தனவந்த குடும்பமொன்றைச் சேர்ந்த சிறுவன் பாதாள குழுவினரால் கடத்தப்பட்டார். அதன் பின்னர் பெற்றோரிடம் கப்பம் கோரியிருந்தார்கள். பெற்றோர் பணம் தருவதாக கூறியும் அந்த 14 வயது சிறுவனை கொலை செய்தார்கள். அந்த சிறுவன் அணிந்திருந்த ஆடைகள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இன்றும் இருக்கின்றன.

ஆனால், தாஜுதீனின் உடற்பாகங்களுக்கு என்ன ஆனது என்பது தெரியாது. ஆகவே, புதிதாக நூறு சட்டங்கள் இயற்றினாலும் அந்த வழக்குகள் மீண்டும் விசாரணைக்கு எடுத்து உறுதிப்படுத்தக் கூடிய சாட்சிகள் இருப்பதாக நான் கருதவில்லை.

### மின் கட்டணம்...

மன்னார் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் (06) திறந்து வைத்து உரையாற்றும்போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விசேடமாக, புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை ஊக்குவிப்பதற்கு இது முக்கியமான காலப்பகுதியாகும். காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை இலங்கையிலும் எம்மால் அவதானிக்க கூடியதாகவுள்ளது. கடந்த காலங்களில் நீர் முகாமைத்துவம் மற்றும் எம்மிடம் இருக்கும் வளங்களை எவ்வாறு முழுமையாக பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்து கலந்துரையாடியிருந்தோம்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் நீரை ஆதாரமாக கொண்டே மின் உற்பத்தி இடம்பெற்றிருந்தது. இருந்தபோதும், தொடர்ந்தும் எம்மால் நீர் மின் உற்பத்தியில் தங்கியிருக்க முடியாது. அதன்காரணமாகவே புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி குறித்து அவதானம் செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டாகும்போது 70 சதவீதம் புதுப்பிக்கத்தக்க மின் வலுவுக்காக அரசாங்கம் கொள்கைத்திட்டமொன்றை வகுத்துள்ளது. ஆயினும், அந்தக் கொள்கையை நிறைவேற்றிக்கொள்வதற்கான உட்கட்டமைப்புகளையும் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியையும் அபிவிருத்தி செய்வதற்காக தனியார் துறையினரின் முதலீடுகள் அதிகம் தேவைப்படுகின்றன. 70 சதவீத புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கத்தை அடைவதற்காக எதிர்வரும் 06 வருடங்களில் 11 பில்லியன் டொலர்கள் முதலீடுகள் அவசியமாகும். மின்கட்டணம் மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதமே திருத்தியமைக்கப்படும் என்றார்.

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (07) டுவிட்டர் பதிவொன்றை இட்டு,

ஊடகங்களில் குறிப்பிடப்படுவது போன்று, இந்த வருடத்தில் மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டணத்தை இருமுறை திருத்துவது என்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும்.

திட்டமிடப்பட்ட வகையிலான மின்துண்டிப்பு ஏதுமின்றி, ஆண்டு முழுவதும் தடையின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு இலங்கை மின்சார சபை திட்டமிட்டுள்ளது.

மின்சார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது. இதன்போது, திட்டமிடப்பட்ட மின்வெட்டு இல்லாமல் தொடர்ச்சியான மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதற்கான விருப்பத்தெரிவுகள் மற்றும் விவசாயத்துக்காக வெளியிடக்கூடிய அதிகபட்ச நீர் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடி முடிவு எட்டப்படும். அடுத்த 12 மாதங்களுக்கு மின் உற்பத்தி, விவசாயத்துக்கான நீர் வெளியீடு, நீர் மின்திறன், அனல்மின் உற்பத்தியால் கிடைக்கப்பெறும் விருப்பங்கள் தொடர்பான விவரங்கள் பகிரப்பட்டு விவாதிக்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவி பெற்ற பொல்பிட்டிய-ஹம்பாந்தோட்டை டிரான்ஸ்மிஷன் பிரிவை நிறைவு செய்வதற்காக காணி உரிமையாளருக்கும் மின்சார சபைக்கும் இடையிலான சர்ச்சையைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவில் எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தென் மாகாணத்தை இணைக்கும் 150 கிலோமீற்றர் தொலைவுப் பாதையானது, கடந்த 03 மாதங்களாக இணைக்கப்பட்டுள்ள 650 மீற்றர் காணிதொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தால், 04 நாட்களில் பணியை நிறைவு செய்ய முடியும். மின்சார சபை ஏற்கனவே 2500 தனிநபர்களுக்கு அரசாங்க மதிப்பீட்டின் பேரில் இழப்பீடு வழங்கியுள்ளதுடன் அந்தப் பகுதிகளில் 150 கிலோ மீற்றர் தூரமளவில் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

# சபாநாயகரை சந்தித்தார் கொரிய நாட்டுத் தூதுவர்





இலங்கைக்கான கொரிய குடியரசின் புதிய தூதுவர் மியோன் லீ (Miyon LEE) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் அண்மையில் சந்தித்தார்.

பரஸ்பர நலன்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கிடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ கலந்துரையாடலில், இலங்கையின் விவசாயத்துறையுடன் தொடர்புபட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்திகளுக்கு ஆதரவளிப்பதாகவும் தூதுவர் கூறினார்.

அத்துடன், KOICA மூலம் வழங்கப்படும் ஆதரவுகள், கல்விக்கான ஆதரவுகள், போக்குவரத்து, நீர் முகாமைத்துவம் மற்றும் சுகாதாரம் போன்று கிராமப்புற அபிவிருத்தி என்பன தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன. பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்னவும் இதன்போது கலந்துகொண்டார்.

# சட்டவிரோத மீன்பிடி தொழிலாளர்களுக்கு பொலிஸார் உடந்தையென குற்றச்சாட்டு

## முல்லைத்தீவில் போராட்டம்

குமுழமுனை,தண்ணிமுறிப்பு, ஹிஜ்ராபுரம் மீனவர்களை கைது செய்தமையைக் கண்டித்தும் அவர்களை விடுவிக்கக் கோரியும் நேற்று திங்கட்கிழமை (07) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு குமுழமுனை,தண்ணிமுறிப்பு மக்களுக்கும் ஹிஜ்ராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் கஜபாகுபுர , சம்பத்நுவர, ஜனகபுர, கலியாணபுர பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி கடந்த சனிக்கிழமை (05) மீன்பிடியில் ஈடுபட்டனர்.இதனைத் தொடர்ந்து குறித்த இருதரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில் குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழிபேசும் மீனவர்களையும் குறித்த பகுதி மக்கள் பிடித்து ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.இந்நிலையில் குறித்த சந்தேக நபர்களுள் ஒன்பது பேர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.





இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட ஹிஜ்ராபும், குமுழமுனை, தண்ணிமுறிப்பு மீனவ சங்கத்தைச் சேர்ந்த 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரிடம் ஒப்படைத்தவர்கள் தப்பி சென்றது எப்படி?, உயிர் போனாலும் உரிமையை விட்டு கொடுக்கோம், தமிழ் தேசத்தில் தமிழருக்கு உரிமை இல்லையா?, எமது வாழ்வாதாரத்தில் கை வைக்காதே, சட்ட பூர்வ தொழிலாளர்களை கைது செய்தது எவ்வாறு, நிறுத்து நிறுத்து பெரும்பான்மையினரின் அத்து மீறலை நிறுத்து, சட்டத்தை மீறி தொழில் செய்வோரை தண்டிக்க யாரும் இல்லையா? அரச அதிகாரிகளே, தமிழ் பேசும் மீனவர்களின் உடமைகளை நாசமாக்காதே, சட்ட விரோத தொழிலாளருக்கு பொலிஸார் உடந்தையா? போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் தாங்கியவாறு கோசங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் பின்னர் தமிழ் பேசும் மீனவ சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அடங்கிய மகஜர் அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அரசாங்க அதிபர் தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி பிரச்சினையை தெளிவுபடுத்தியதோடு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தர முயற்சி செய்வதாகவும் கோரிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.இப்போராட்டத்தில் பொதுமக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# விதைப்பொதிகள் விநியோகமும் செயன்முறை விளக்கமும்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் 'மாணாக்க உழவர்' எனும் வீட்டுத்தோட்டப் போட்டியை நடத்தி வருகின்றது. இதற்கிணங்க, இந்த ஆண்டுக்கான போட்டிக்குரிய விதைப்பொதி வழங்கல், செயன்முறை விளக்கம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (06) நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் வி.விஜிதன், விவசாயப் போதனாசிரியர் ச.பாலகிருஸ்ணன் ஆகியோர் வீட்டுத்தோட்டச் செயன்முறை தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தனர்.

இதன்போது பல்வேறு பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு பத்து வகையான விதைகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் அனைவருக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் தொடர் மதிப்பீட்டின் அடிப்படையில் சிறந்த செய்கையாளர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

## தினசரி பலாபலன்கள்

### சோபகிருது வருடம் ஆடி மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**ரிஷபம்:** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம், உணவு. உறக்கம் தடைபடும் நாள்.

**மிதுனம்:** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**கடகம்:** தொழில்-வியாபாரத்தில் அதிக லாபங்களை அடைவீர்கள். நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**சிம்மம்:** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**கன்னி:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**துலாம்:** எதிர்ப்பாராத வகையில் உங்கள் புகழ்,அந்தஸ்து உயரப் போகின்றது.அரச வகையில் லாபம் உண்டு.

**விருச்சிகம்:** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது நல்லதையே நினையுங்கள்.

**தனுசு:** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள்.ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**மகரம்:** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**கும்பம்:** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**மீனம்:** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**திதி:** அஷ்டமி பி.இ.3.52 வரை பின் நவமி (தேய்)
**நட்சத்திரம்:** பரணி பி.இ. 1.32 வரை பின் கார்த்திகை
**யோகம்:** மரண யோகம் முழுவதும்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 8.05– 9.05 மணி வரை
**ராகுகாலம்:** 3.05 – 4.35 மணி வரை
**எமகண்டம்:** 8.05–10.35 மணி வரை
**குளிகை:** 12.05– 1.35 மணி வரை
**சந்திராஷ்டமம்:** கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிஷ்டம்:** அஸ்வினி,மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739





நானுஓயா டெஸ்போர்ட் தோட்டத்தில் எடை குறைந்து பிறந்த 22 குழந்தைகளின் குடும்பங்களுக்கு பிரான்ஸ் தூதுவர் போசாக்கு உணவு பொதிகளை வழங்கி வைத்தார். நானுஓயா டெஸ்போர்ட் தோட்ட சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில் தோட்ட வைத்தியசாலையில் நேற்று (07) நடைபெற்ற இவ்வைபவத்தில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட உட்பட பலர் கலந்து கொண்டனர். படங்கள் டி. சந்ரு





மேல் நீதிமன்ற நீதிபதி எம்.சி.பி. சஞ்சீவ மொராயஸ், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகவும் சோபித ராஜகருணா மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

# கொழும்பு மாநகர சபையில் முஸம்மிலின் புகைப்படம்





அஷ்ரப் ஏ. சமத்

கொழும்பு மாநகர சபையில் ஏ.ஜே.எம். முஸம்மில் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டுவரை மாநகர சபையின் 25ஆவது மாநகர முதல்வராக பணியாற்றினார். இந்நிலையில், அவரின் சேவையை கௌரவிக்குமுகமாக அவரது புகைப்படம் கொழும்பு மாநகர மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (07) இடம்பெற்றது. கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ரா ஜெயவர்த்தன இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கலந்துகொண்டு புகைப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார். அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மாநகர ஆணையாளர் இங்கு உரையாற்றுகையில்,முன்னாள் மேயர் முஸம்மிலின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு மாநகர சபையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்றன. அத்திட்டங்களினால் இன்றும் கொழும்பு வாழ் மக்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

வெள்ளவத்தை பொதுச்சந்தை முதல் மட்டக்குளி பொதுச்சந்தை, விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்கா, பாதை அபிவிருத்திகள், பழைய தொடர்மாடி வீடுகளை அழகுபடுத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் பெரோஸா முஸம்மிலும் பல்வேறு மகளிர், மத நல்லிணக்க, சமூக சேவைகள் போன்ற திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் கூறினார்.

# கல்வியில் அரசியல் தலையீட்டை ஆளுநர் நிறுத்தாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டம்

## யாழில் யோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

வட்டுக்கோட்டை நிருபர்

வடமாகாண ஆளுநர் வடக்கு கல்வியை அரசியல் மயப்படுத்தும் செயற்பாட்டை கைவிடாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டத்துக்குத் தள்ளப்படுவோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் (06) ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களை சந்தித்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கல்வி ஆசிரிய இடமாற்றங்களில் இடமாற்றச் சபையின் அறிவுறுத்தல்களை மீறி ஆளுநர் இடமாற்றங்களை வழங்குவதாக அறிகிறோம்.

வடக்கு கல்வியின் நிர்வாக செயற்பாடுகள் சுதந்திரமாகவும் வினைத்திறனாகவும் நடப்பதற்கு ஆளுநர் இடையூறு ஏற்படுத்தக் கூடாது. அது மட்டுமல்லாது, வடக்கில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் இழுத்தடிக்கப் பட்டு ஊழல்வாதிகள் பாதுகாக்கப் படுகின்றனர்.



மேலும், ஆயிரம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கும் திட்டத்துக்கு சுமார் 2,285 மில்லியன் ஒதுக்கப்பட்ட நிலையில் வடக்கிலும் தேசிய பாடசாலைகள் என சுவர்களில் எழுதி திறப்பு விழா செய்தார்கள்.

தேசிய பாடசாலைகளாக 22 பாடசாலைகள் மட்டுமே உள்வாங்கப்பட்ட நிலையில் எஞ்சிய பணத்துக்கு என்ன நடந்தது ?

ஆகவே, வடக்கு கல்வியை அரசியல் மயமாக்குவதற்கு வடமாகாண ஆளுநருக்கு இடமளிக்க மாட்டோம் என்பதுடன், அவர் தனது செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு தள்ளப்படுவோம் என்றார்.

# திருமணம் தயாரான நிலையில் விபத்துக்குள்ளான காதலர்கள்

## சம்பவ இடத்தில் காதலி பலி

பனாகொட இராணுவ முகாமுக்கு அருகில் லொறியொன்றும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

திருமணத்துக்கு தயாரான நிலையில் காதலனும் காதலியும் பயணித்த மோட்டார் சைக்கிளே லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் காதலி சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் காதலன் படுகாயமடைந்து ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மாலபேயில் வசிக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவன பிரதிநிதியான கோஷனி அலோக்யா என்ற 25 வயதான யுவதியே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

காதலர்கள் இருவரும் பாதுக்க பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு கொடகமவில் இருந்து மாலபே நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர்.

இதன்போது பனாகொட இராணுவமுகாமுக்கு அருகில் உள்ள வீதி திருத்தும் இடத்தில் மோட்டார் சைக்கிள் விழுந்தபோது முன்னால் வந்த லொறி மோதியே இவ்விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்து இடம்பெற்றவுடன் இருவரும் அணிந்திருந்த தலைக்கவசம் கீழே விழுந்துள்ளன. இதனால் பெண்ணின் தலையில் பலத்த காயமேற்பட்டு அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் வலது கால், வலது கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் சிக்கிய இந்த காதலர்கள் இருவரும் எதிர்வரும் ஓரிரு நாளில் நிச்சயதார்த்தம் செய்துகொள்ள எதிர்பார்த்திருந்ததாக தெரியவந்துள்ளது.

# களுத்துறை மாவட்டத்தில் நீர் விநியோகத் தடை

பேருவளை பி.எம். முக்தார்

அளுத்கம, மத்தும, அகலவத்தை ஒன்றிணைந்த நீர் வழங்கல் திட்டத்தில் அத்தியாவசிய விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் நாளை (09) புதன்கிழமை காலை 9.00 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரையான 15 மணி நேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

வாத்துவ, வஸ்கடுவ, பொத்துப்பிட்டிய, களுத்துறை தெற்கு, களுத்துறை வடக்கு, போம்புவல, கட்டுக்குருந்தை, நாகொட, பயாகல, மக்கொனை, தர்காநகர், அளுத்கம, களுவாமோதர, மொரகல்ல, பிலம்னாவத்த மற்றும் பெந்தோட்டை ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 08ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# இந்திய அரசியல்வாதியின் இனப்படுகொலை குற்றச்சாட்டு

இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த மாதம் 27ஆம் திகதி ராமேஸ்வரத்தில் வைத்து ஆற்றிய உரையில் இலங்கையில் இடம்பெற்றது மனிதப் பெரும் படுகொலை என்ற அர்த்தத்தில் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் அமைப்பாளரான அண்ணாமலை "என் மண் என் மக்கள்" என்ற பெயரில் ஒரு பாதயாத்திரையை ஆரம்பித்திருக்கிறார்.

அதன் தொடக்க நிகழ்வு ராமேஸ்வரத்தில் இடம்பெற்றது. அதில் அமித்ஷா உரையாற்றினார் .

" காங்கிரஸ் மற்றும் தி.மு.கவின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சிக் காலத்தில் தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்தது, தமிழக மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்" என்று தனது உரையின் ஒரு பகுதியில் கூறியுள்ளார் அமித்ஷா.

இதில் அமித்ஷா பயன்படுத்திய வார்த்தை நேரடியாக இனப்படுகொலை என்ற அர்த்தத்தைத் தருவதாகக் கூறப்படுகிறது. அவர் "நரசங்கார" என்ற வார்த்தையை பயன்படுத்தியதாகவும் அதன் அர்த்தம் பாரிய மனிதப் படுகொலை என்றும் அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், அதனை இனப்படுகொலை என்று வியாக்கியானம் செய்ய முடியும் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். அதேசமயம், அமைச்சரின் உத்தியோகபூர்வ ட்விட்டர் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி அண்ணாமலையின் பாதயாத்திரை தொடர்பாக ஒரு காணொளி வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஓரிடத்தில் ஈழத் தமிழர் கண்ணீர்ச்சாபம் என்றும் வீணாய்ப் போகாது" என்ற ஒரு வசனம் உண்டு. அதைத் தொடர்ந்து "நமக்கு தமிழ் ஈழம் வேண்டும்" என்ற ஒரு சுலோக அட்டை, பாலச்சந்திரனின் முகம் போன்றன காட்டப்படுகின்றன.

அக்காணொளியும் காங்கிரஸ், தி.மு.க. கூட்டுக்கு எதிராகத்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தென்னகத்தில் பாரதிய ஜனதாவின் நம்பிக்கை நட்சத்திரமாக மேலெழுந்து வருகிறார். ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் அவரைக் கொண்டாடுகிறார்கள்.இலங்கைக்கு வந்துசென்றபின்னர் அண்ணாமலை வெளிநாடுகளுக்குச் சென்று புலம்பெயர் தமிழர்களையும் சந்தித்திருந்தார்.

தமிழகத்தில் அடுத்த தேர்தலை நோக்கி காங்கிரஸுக்கும், தி.மு.கவுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டு பலமானது என்று நம்பப்படுகிறது. இக்கூட்டின் வெற்றி வாய்ப்புகளைக் குறைப்பதற்காக ஈழத் தமிழர்கள் விவகாரத்தையும் பாரதிய ஜனதா கையில் எடுத்திருக்கிறது.

ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டதற்கு காங்கிரஸும் தி.மு.கவும் காரணம் என்று பாரதிய ஜனதா பிரசாரம் செய்கின்றது. பிரசாரத்தின் ஒரு பகுதியாகவே அமித்ஷா இனப் படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

அமித்ஷா ஓர் உள்துறை அமைச்சர். உள்துறை அமைச்சு எனப்படுவது இந்தியாவைப் பொறுத்தவரையிலும் பிரதமருக்கு அடுத்தபடியான பதவி. அவ்வாறான பொறுப்பில் இருக்கும் ஒருவர், குறிப்பாக, பாரதிய ஜனதாவின் பெருந் தலைவர்களில் ஒருவர். அவ்வாறு இனப் படுகொலை என்று தமிழில் ட்விட் செய்கிறார்.

உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக வெளியுறவு சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தை பொறுப்பின்றிக் கையாள முடியாது. இலங்கைத்தீவில் இடம்பெற்றது பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப் படுகொலை என்று இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இப்பொழுது அதை "நரசங்கார் - Narasanhaar" என்று கூறுகிறார்.

1983ஆம் ஆண்டு ஒகஸ்ட் 16ஆம் திகதி திருமதி இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் இலங்கையில் நடப்பது இனப் படுகொலை என்று கூறினார்.

1983 ஜூலைப் படுகொலைகளை எதிர்த்து ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி தமிழகம் முழுவதும் வரலாறு காணாத பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் "இலங்கைத் தீவில் நடப்பது என்ன? அது இனப்படுகொலை தவிர வேறு எதுவுமில்லை" - என்றார் .

ஓர் இந்தியத் தலைவர் அவ்வாறு குறிப்பிட்டமை அதுதான் முதல் தடவை. அதற்குப் பின் எந்த ஒரு இந்தியத் தலைவரும் அவ்வாறு கூறியிருக்கவில்லை.இந்திரா காந்தி அவ்வாறு கூறிச் சரியாக 40 ஆண்டுகளின்பின் இந்திய உள்துறை அமைச்சர் இப்பொழுது அதை இனப்படுகொலை என்ற பொருள்பட வர்ணித்துள்ளார் என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தனது வழமையான அரசியல் பத்தியில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஈழத் தமிழர் தொடர்பான பாரதிய ஜனதாவின் நிலைப்பாடு அதன் மூத்த தலைவர்களான அடல் பிஹாரி வாஜ்பாய்,அவரது அமைச்சரவையில் இருந்த காலஞ்சென்ற பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோரின் எண்ணங்கள் தமிழர் ஆதரவு போக்கில் இருந்தன. சர்வதேச நிகழ்வொன்றில் அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வாஜ்பாய் ஏறெடுத்தும் பார்க்காமல் சென்றதாக செய்திகள் கூட வெளிவந்திருந்தன. இப்போது அதேபோன்ற கடும் நிலைப்பாட்டில் அமித்ஷா இருப்பது இலங்கைக்கு எரிச்சலைத் தரக்கூடும்.

பாரதிய ஜனதா இலங்கை விடயத்தில் அப்படியொரு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதும் தமிழ்நாட்டில் அதனை பாரதிய ஜனதாவின் முக்கிய தலைவர் ஒருவர் அறிவித்திருப்பதும் தமிழர்களுக்கு பெரும் ஆறுதலை தந்துவிடப்போவதில்லை.இப்படியொரு அறிவிப்பு வந்ததை எண்ணி இலங்கை சஞ்சலமடையும் வாய்ப்பும் இல்லை. ஆனால், தமிழர்களை கொல்லவிட்டு பார்த்துக்கொண்டிருந்த திராவிட முன்னேற்றக்கழக கம்பனிக்கு தலையில் விழுந்த கொட்டு - இது என்ற திருப்தி, இதனால் தமிழர்களுக்கு ஏற்படும்.

ஆனால், ஈழத்தில் நடந்தது இனப் படுகொலைதான் என்று சர்வதேச சமூகத்திற்கும் மனித உரிமைகள் அவைக்கும் எடுத்துக்கூறிவரும் ஈழத்தமிழர் பிரதிநிதிகள் இந்த விடயத்தை உதாரணமாகக் காட்டி ,அமித் ஷாவின் உரையை மேற்கோள்காட்டி இனப்படுகொலை நடந்ததென்ற உண்மையை உரக்க இன்னுமொருதடவை கூறலாம்.

அமித் ஷாவை பொறுத்தவரை அவர் இந்தியாவின் முடிசூடா மன்னன், பிரதமர் பதவிக்குரிய அதிகாரங்கள் கொண்டிருப்பவர், அரசியல் வியூகம் வகுப்பவர் என்ற அந்தஸ்துகள் கொண்டவர்.அவரின் இந்தக் குற்றச்சாட்டை வைத்தே உலகுக்கு உண்மையை மீண்டும் உரைக்கலாம் தமிழர்கள். அரசியலுக்காகப் பேசினாலும் உண்மையை உரக்கச் சொன்னமைக்காக அவரைப் பாராட்டினாலும் தப்பில்லை. அவரின் பேச்சு தமிழர் மீதான போலியான பாசமாக இருப்பதாக வைத்துக்கொண்டாலும் , அரசியலுக்காகத் தமிழரை ஏமாற்ற போலி உண்ணாவிரதம் இருந்த தி.மு.க. கம்பனித் தலைவரை விட அமித் ஷா எவ்வளவோ மேல்.

# அணு ஆயுதங்களுக்கு தேவை முடிவுரை!

இரண்டாம் உலகப் போரின் இறுதியில், 1945 ஒகஸ்ட் 6 அன்று ஜப்பானின் ஹிரோஷிமாவிலும் மூன்று நாள் கழித்து (ஒகஸ்ட் 9) அந்நாட்டின் இன்னொரு நகரமான நாகசாகியிலும் அணுகுண்டுகள் வீசப்பட்டன. அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சால் இந்த இரண்டு நகரங்களும் எதிர்கொண்ட பேரழிவுகளை ஒருபோதும் மறக்க முடியாது. இந்தக் கொடூரச் செயலால் ஏறத்தாழ 2.5 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் பல்லாயிரம் பேர் பல்வேறு வகை பாதிப்புகளால் மரணமடைந்தனர்.




ஹிட்லரின் நாஜி படைகளை வெற்றிகொண்ட சோவியத் ஒன்றியத்தின் செம்படை, ஜப்பானை நோக்கி முன்னேறியது. 1945 ஒகஸ்ட் 8 அன்று ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்ட பிறகும் போரைத் தொடர நினைத்த ஜப்பான், ஒகஸ்ட் 15 அன்று சரணடைவதற்கான அறிவிப்பை வெளியிட சோவியத் ஒன்றியத்தின் இந்த வியூகமே காரணமானது. உண்மையில், அணுகுண்டுகள் வீசப்படாவிட்டாலும்கூட ஜப்பான் 1945 ஒகஸ்ட் மாதம் சரணடைந்திருக்கும் என்பதை ஜப்பானிய, அமெரிக்க ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதை அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஹாரி எஸ்.ட்ரூமேனும் நன்கு அறிந்திருந்தார். ஆம், அவசியமே இல்லாத நிலையிலும் ஜப்பானிய நகரங்கள் மீது அணு ஆயுதங்களை அமெரிக்கா வீசியது. தனது அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தை உலகில் நிலைநாட்ட வேண்டும்; சோவியத் ஒன்றியத்தை அச்சுறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் அரசியல் நோக்கமே இதற்குக் காரணமாகும்.

**மனிதகுலத்துக்கு எதிரானது:**

உலகில் இதுவரை 2,087 அணுகுண்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அமெரிக்கா 1,054, ரஷ்யா 715, பிரிட்டன் 45, பிரான்ஸ் 210, சீனா 45, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா தலா 6 எனப் பரிசோதனை நடத்தியுள்ளன. இந்தப் பரிசோதனைகள் அனைத்தும் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவித்திருக்கின்றன. ஏதேனும் விபத்தால் ஓர் அணுகுண்டு வெடித்தால்கூட அது பல இலட்சம் மக்களைக் கொன்று குவித்துவிடும்.

அதிகளவிலான அணுகுண்டு வெடிப்புகளால் ஏற்படும் புகை/ தூசு மண்டலம் தரையிலிருந்து மேலெழுந்து புவிப்பரப்பு முழுவதையும் பல மாதங்களுக்குப் போர்த்திவிடும். இதனால் சூரியக் கதிர்கள் புவிப் பரப்பில் நுழையாது. பூவுலகே இருண்டு - குளிர்ந்து- வறண்டுவிடும். இது அணு குளிர்காலம் எனப்படும். இதனால் புவிவாழ் உயிரினங்களும் மக்களும் மடியும் நிலை ஏற்படும்.

அணுகுண்டு வீசப்படும் இடத்தில் உள்ள அனைத்தும் எரிந்து ஆவியாகிவிடும். அவ்வெடிப்பிலிருந்து வெளிவரும் அயனியாக்கக் கதிர்வீச்சு உயிரினங்களின் செல்களையும் உறுப்புகளையும் அழித்துவிடும். அதிகளவிலான இக்கதிர்வீச்சு, உடனடி மரணத்துக்கு வழிவகுக்கும். இக்கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புற்றுநோய் உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படும். அவர்களின் குரோமோசோம்களும் ஜீன்களும் பாதிக்கப்படும். எதிர்காலச் சந்ததிகளுக்குப் பல்வேறு மரபு சார்ந்த நோய்கள் உருவாகும்.

**அணு ஆயுதங்கள் சட்டவிரோதம்:**

'அணு ஆயுதங்கள் பேரழிவை உருவாக்குபவை. எனவே, அவற்றை முழுமையாக ஒழித்திட வேண்டும்' என்ற முகப்புரையுடன் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம், ஐக்கிய நாடுகளின் பொது அவையில் 2017 ஜூலை 7 அன்று நிறைவேறியது. இந்த உடன்பாட்டை 122 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன. இது சட்டரீதியான சர்வதேச உடன்படிக்கையாக மாறியுள்ளது. இந்த உடன்பாட்டின்படி, அனைத்து அணு ஆயுதங்களும் சட்டத்துக்குப் புறம்பானவை; அவற்றைஒழித்திட வேண்டும்; அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அணு ஆயுத நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

உலகில் தற்போது 14,930 அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 90% அணு ஆயுதங்கள் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் உள்ளன. ஏறத்தாழ 1,800 அணு ஆயுதங்கள் உடனடியாக ஏவப்படக்கூடிய வகையில் ஆயத்த நிலையில் உள்ளன. அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் ஐரோப்பாவில் 5 நாடுகளிலும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. ஹிரோஷிமா-நாகசாகியில் பிரயோகிக்கப்பட்ட அணு ஆயுதங்களைவிட, இன்றைய அணு ஆயுதங்கள் பல மடங்கு அழிவாற்றல் மிக்கவை. இப்பேரழிவு அணு ஆயுதங்களிலிருந்து உலகைக் காக்க நம்பகமான ஒரே வழி, அவற்றை முற்றிலும் ஒழிப்பதுதான்.

**சமூகரீதியிலான பாதிப்புகள்:**

அணு ஆயுதங்கள் பல்வேறு சமூகப் பொருளாதார தீய விளைவுகளையும் ஏற்படுத்திவருகின்றன. அணு ஆயுதங்களுக்காக, 82.4 பில்லியன் டொலர்களை 9 அணு ஆயுத நாடுகள் 2021ஆம் ஆண்டில் செலவு செய்துள்ளன. அதேவேளை, உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோர் வறுமையாலும் வேலையின்மையாலும் மருத்துவ வசதிகள் இன்றியும் அவதிப்பட்டுவருகின்றனர்.

கல்வி-மருத்துவ வசதிகளுக்கான நிதியின் பெரும்பகுதி அணு ஆயுதங்களுக்காகவும் இராணுவத்துக்காகவும் செலவு செய்யப்படுகிறது. ஏறத்தாழ 3 கோடி அமெரிக்கர்களுக்கு மருத்துவக் காப்புறுதி இல்லை. அமெரிக்காவில் மருத்துவக் காப்புறுதி இல்லையெனில் எந்தச் சிகிச்சையும் பெற முடியாது. கோடிக்கணக்கில் டொலர்களை அணு ஆயுதங்களுக்கு வாரி இறைக்கும் அமெரிக்கா, தனது குடிமக்களுக்கு மருத்துவ சிகிச்சையைக்கூட இலவசமாக வழங்கவில்லை.

பல நாடுகளிலும் இதே நிலைதான். இந்தியாவில் அணு ஆயுதங்களுக்காக மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபா செலவு செய்துவருகிறது. நாடாளுமன்றத்தில் இது தொடர்பாகக் கேள்வியும் கேட்க முடியாது. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் 6 கோடி இந்தியர்கள் மருத்துவச் செலவுகளால் வறுமைக் கோட்டுக்குக் கீழ் தள்ளப்படுகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் 3.5 இலட்சம் முதல் 4 இலட்சம் பேர் வரை காசநோயால் இறந்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 321 குழந்தைகள் வயிற்றுப்போக்கின் காரணமாகவே இறக்கின்றன என்பது எவ்வளவு வேதனையானது.

அணு ஆயுதங்கள் உலக சமாதானத்தின், வளர்ச்சியின் எதிரிகள். மனிதகுலத்தின் கண்ணிய வாழ்வைக் கெடுப்பவை. அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் போரில் யாரும் வெல்ல முடியாது. தற்போது நடந்துவரும் ரஷ்ய-உக்ரைன் போர், நேட்டோ-ரஷ்யப் போராக மாறியுள்ளது. இது ஓர் அணு ஆயுதப் போராக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளமை கவலை அளிக்கிறது. எனவே, அணு ஆயுதங்களை ஒழிப்போம். பூவுலகைக் காப்போம்.

( ஒகஸ்ட் 6: ஹிரோஷிமா நாள்; ஒகஸ்ட் 9: நாகசாகி நாள் என்பதால் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

***ஜீ.ஆர்.ரவீந்திரநாத்***
***நன்றி - தமிழ் இந்து***







யாழ்ப்பாணம் - சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி நேற்று முன்தினம் (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. தேவாலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ஞானரூபன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற திருநாள் திருப்பலியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து லிகோரியாரின் திருச்சொருபம் தாங்கிய ஊர்தி ஆலயத்தில் இருந்து புறப்பட்டு கச்சாய் வீதி வழியாக கிராமத்தைச் சுற்றி ஆலயத்தை வந்தடைந்தது. இப்பவனியில் தேவாலய பங்கு மக்களும் கிராம மக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1848 – மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்த வீரபுரன் அப்பு தூக்கிலிடப்பட்டான்.
- 1876 – தோமஸ் ஆல்வா எடிசன் மிமியோகிராஃப் என்ற பதிவு செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
- 1908 – வில்பர் ரைட் தனது முதலாவது வான்பயணத்தை பிரான்சில் "லெ மான்ஸ்" என்ற இடத்தில் மேற்கொண்டார். இதுவே ரைட் சகோதரர்களின் முதலாவது வான் பயணமாகும்.
- 1942 – இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் கூட்டிய மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 – ஓர் இரகசிய இராணுவ விண்வெளித் திட்டத்தை முன்னெடுத்து நாசா கொலம்பியா விண்ணோடத்தை விண்ணுக்கு அனுப்பியது.
- 1992 – யாழ்ப்பாணம், அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவ வட பிராந்தியத் தளபதி கொப்பேகடுவ கொல்லப்பட்டார்.
- 2006 – திருகோணமலைக்கு வடக்கே வெல்வெறிப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

# வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்த புதிய வேலைத்திட்டங்கள்

## வட மாகாண ஆளுநர் தலைமையில் ஆராய்வு



யாழ். நிருபர்

வடமாகாணத்தில் வீதி விபத்துகளைக் குறைத்து வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வடமாகாண ஆளுநரின் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், வடமாகாண பிரதம செயலாளர், மாவட்ட செயலாளர்கள், வைத்திய அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், மாநகர சபை ஆணையாளர், வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சார்பாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் துறைசார் அதிகாரிகளின் நேரடி, இணையவழி பங்குபற்றுதலுடன் ஆளுநர் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலை எலும்பியல் வைத்திய நிபுணர் கோபிசங்கர் மேல் மாகாணத்துக்கு அடுத்தபடியாக அதிக வீதி விபத்துகள் இடம்பெறும் மாகாணமாக வடமாகாணம் காணப்படுவதாகக் கூறினார்.

போதியளவு வீதிப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, வர்த்தக நிலையங்கள் சந்தைப்படுத்தலுக்காக வீதிகளைப் பயன்படுத்துகின்றமை, முறையற்ற வாகனத் தரிப்பிடங்கள், நடைபாதையற்ற வீதிகள் முதலிய பலவும் இதற்குப் பிரதான காரணங்களாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவற்றைக் கேட்டறிந்த ஆளுநர் வர்த்தக நிலையங்களுக்கு முன்னே விளம்பரங்கள் செய்ய வீதிகளைப் பயன்படுத்துதல், வாகனங்களை நிறுத்துதல் முதலியவற்றால் பாதசாரிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் எனவே, இவற்றைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கூறினார்.

வைத்தியசாலைக்கு வந்து செல்லும் பயணிகளை இலக்காகக்கொண்டே பொதுப் போக்குவரத்து சேவைகள் செயற்படுவதால் யாழ். போதனா வைத்தியசாலை வீதியை சுற்றி பஸ்களின் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் ஏற்படும் நெரிசல்களைக் குறைப்பதற்கு வைத்தியசாலை வீதியைத் தவிர்த்து மாற்றுப் பாதையூடாக பிரதான வீதிப் போக்குவரத்து மார்க்கத்தைப் பயன்படுத்த பஸ் சாரதிகளை ஊக்குவிப்பதுடன், வைத்தியசாலைக்கு வந்து செல்பவர்களுக்கான குறுகிய போக்குவரத்துச் சேவைக்கான வேறொரு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்றும் இந்தக் கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் வைத்தியசாலை வீதியின் நடுவிலுள்ள வாகனத் தரிப்பிடத்திலேயே வாகனங்களை நிறுத்துவதால் அதிக விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் உருவாகுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டு அதை மாற்றி வைத்தியசாலை வீதியை ஒருவழிப் பாதையாக மாற்றக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

வீதிகளுக்கு நடுவே வாகனத்தரிப்பிடங்கள் இருப்பது மிகவும் பழமையான ஒரு நடைமுறை என்று இங்கு சுட்டிக்காட்டிய வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இனிவரும் காலங்களில் நிலக்கீழ் வாகனத்தரிப்பிட முறைகளுக்கு நாம் செல்லவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறும் செயற்பாடுகள் எங்கே, எப்படி, எப்போது நடைபெறுகின்றன என்பது தொடர்பில் முழுமையான ஆய்வை மேற்கொண்டு உண்மையான பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு, அதன்பின்னர் வீதிப்பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலம் எவ்வாறு விபத்துகளைக் குறைக்கலாம் என்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

ஆய்வில் இனங்காணப்பட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு பாதுகாப்பான போக்குவரத்து வாரம் ஒன்றை அனுஷ்டித்து அதில் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

நெடுந்தூரப் பயணங்களில் ஈடுபடும் ஓட்டுநர்கள் பல மணி நேரங்கள் கடமையில் ஈடுபடுவதால் அவர்கள் களைப்படைதல், நித்திரையாகுதல் போன்றவற்றால் விபத்துகள் ஏற்படுவதாகவும் அவர்களுக்கான ஓய்வுடன் புத்துணர்ச்சியை வழங்கும் வகையில் ஏற்கனவே புளியங்குளம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட தரிப்பிட வசதியை விரிவாக்கி விரைவில் நடைமுறைப்படுத்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும், பாடசாலைகளில் மாணவர்களுக்கு போக்குவரத்து தொடர்பான சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைகள் பற்றி தெளிவுபடுத்துவதால் இனிவரும் காலங்களில் விபத்துகளைத் தடுக்க முடியும் எனவும் மக்கள் மத்தியில் வீதிப்பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கல்வி அமைச்சு, சுகாதாரத்துறை, பொலிஸ் திணைக்களம், மாநகர சபை, உள்ளூராட்சி மன்றங்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் திணைக்களங்கள், வடமாகாண போக்குவரத்து அதிகாரசபை முதலியன இணைந்து, மாவட்ட அரசாங்க அதிபர்கள் தலைமையில் வீதிப்பாதுகாப்பு தொடர்பான குழுவை உருவாக்கி அதன் மூலம் விபத்துகளைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

# நீர்க்கட்டண அதிகரிப்புக்கு எதிராக மக்களை அணிதிரட்டி போராட்டம் மேற்கொள்ளவுள்ளோம்

## மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



நீர்க் கட்டண அதிகரிப்புக்கு எதிராக மக்களை அணிதிரட்டி நாடுபூராகவும் போராட்டம் மேற்கொள்ளவிருக்கிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கம் நீர்க் கட்டணத்தை அதிகளவில் அதிகரிக்க எடுத்திருக்கும் நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்வதற்கு கஷ்டப்பட்டு வரும் நிலையில், அரசாங்கம் நீர்க் கட்டணத்தை 50 வீதத்தால் அதிகரித்திருப்பதானது பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் மீது சுமத்தப்படும் பாரிய சுமையாகும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக விரைவில் மக்களை அணிதிரட்டிக்கொண்டு நாடுபூராகவும் போராட்டங்களை மேற்கொள்ளவும் மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் இருக்கிறோம். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாரியளவிலான வரி அதிகரிப்புக் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

அதேபோன்று இலட்சக்கணக்கானவர்கள் தொழிலற்றிருக்கின்றனர். எரிபொருள், மின்சாரம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்யும்போது மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற நிலையில், மக்களின் அத்தியாவசிய நுகர்வுப்பொருளான நீருக்காக அறவிடப்படும் கட்டணம் பாரியளவில் அதிகரித்துள்ளதன் மூலம் மக்களை மேலும் கஷ்டத்துக்கு தள்ளிவிட்டிருக்கிறது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கை பூரணப்படுத்திக்கொள்வதற்காக மக்களுக்கு பாரியளவில் அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறது. மக்கள் மீது சுமத்தியிருக்கும் அனைத்துவகையான அழுத்தங்களுக்கும் எதிராக மக்களை வாழவைக்கும் உரிமையைக் கோரி பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் தயார்.

அரசாங்கத்தின் இந்தச் செயலைக் கண்டித்தும் அதிகரிக்கப்பட்ட நீர்க் கட்டணத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் விஷேடமாக இது தொடர்பாக மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்து, மக்களை அணிதிரட்டுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# எந்த மூலையில் வாழ்ந்தாலும் மொழி எம்மை ஒன்றுசேர்க்கும்

## சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி வேல்தம்பி தெரிவிப்பு







எம்.எஸ்.எம்.முன்தஸிர்

நாம் இவ்வுலகின் எந்த மூலையில் வாழ்ந்தபோதிலும், மொழி எம்மை ஒன்றுசேர்க்கும். அந்த அடிப்படையில் கொடிகாமத்தைச் சேர்ந்த கவிஞர் ஔவையும் பல வருடங்களாக கடல் கடந்து லண்டனில் வாழ்ந்தாலும் கூட தமிழ் அபிமானம், பற்றுதலுடன் நூலாக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள்,வணிகபீட சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி தி. வேல்தம்பி தெரிவித்தார்.

கவிஞர் சுவர்ணா கௌரிபாலா (ஔவை) எழுதிய திருத் தொண்டர் சரிதம் மற்றும் உண்மையைத் தேடி ஆகிய கவிதை நூல்களின் வெளியீட்டு விழா தென்மராட்சி கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு சைவப் புலவரும் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், புலம் பெயர்ந்து செல்லும் மக்களில் அதிகமானோர் அந்தந்த நாடுகளின் மொழி, கலாசாரத்துடன் இரண்டறக் கலந்து விடுகின்றனர்.ஒரு சிலர் மட்டுமே தமிழ்ப் பற்றுடன் இருக்கின்றனர்.அதற்கு கவிஞர் ஔவையும் சிறந்தொரு எடுத்துக்காட்டாகும். எமது வாழ்வு செப்பனிடப்பட வேண்டுமென்றால் பெரிய புராணத்தைப் படித்தல் வேண்டும் என்பது ஆன்றோர் கருத்தாகும்.

தமிழ் மக்களைத் தாண்டி உலகில் உள்ள அனைவரும் பெரிய புராணத்தில் விடயங்களைக் கற்றால் தமது வாழ்க்கை முறைமையை சிறப்பாக அமைத்துக்கொள்ள முடியும்.வெவ்வேறு நாடுகளில் வேற்று மொழி பேசுகின்றவர்கள்கூட, தமிழ் மொழியைப் பயின்று ஆய்வரங்குகளில் தமிழ் மொழியூடாக தமது கருத்துகளைப் புலமைப்படுத்துகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தமிழ் மொழியில் சிறப்பாகப் பேசியிருந்தார்.பிற தேசங்களிலிருந்து நல்லைக் கந்தனைத் தரிசிப்பதற்கு வருகை தரும் வேற்று நாட்டவர்கள் தமிழ் மொழியில் இறைவனின் திருநாமத்தை உச்சரித்து வணங்குவதை நாம் நேரில் காண்கிறோம்.

உலகமெங்கும் இன்று ஒப்பியல் ஆய்வுகள் என்ற வகையில், தமிழ்மொழியுடன் வேற்று மொழிகளையும் இணைத்து ஆய்வுகளை மேற்கொள்ளும் தன்மை காணப்படுகின்றது.

இதனடிப்படையில், எமது தமிழ் மொழியானது செம்மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. செம்மொழி என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கு எமது பழந்தமிழ் இலக்கியங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன.

பெரிய புராணம் நூலை பொதுவாக நாயன்மார்களின் வரலாற்று நூலாகவே பார்க்கின்றோம். அதனையும் தாண்டி பெரிய புராணத்தில் எமது வாழ்வியலுக்குத் தேவையான பல்வேறுபட்ட தகவல்கள் கூறப்பட்டுள்ளன.

சட்ட வல்லுனர்கள் சட்டத்தின் தன்மையை உணர்வதற்கு பெரிய புராணம் மற்றும் திருக்குறள் போன்ற நூல்கள் பேருதவியாக உள்ளன.

நீதி, தர்மம் உள்ளிட்ட விடயங்களை எமது பழந்தமிழ் நூல்கள் ஊடாக கற்றுணர வேண்டும். பெரிய புராணம் உள்ளிட்ட நூல்களைக் கற்கும் சந்தர்ப்பம் இன்றைய இளம் தலைமுறையினருக்கு மிகவும் குறைவாகவே உள்ளது.

பாடப் புத்தகங்களில் கூட அவற்றின் வகிபாகம் தற்போது மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, இன்றைய எழுத்தாளர்கள் தமது இலக்கியங்களின் ஊடாக இளம் தலைமுறைக்கு நல்லபல விடயங்களைப் புகட்ட வேண்டும் என்றார்.

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் - மதவாச்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (06) இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான பி.சாரங்க (26 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் காவல் கடமைக்காக வயலுக்குச் சென்றவேளையே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சோதனை நடவடிக்கை: கேரள கஞ்சா மீட்பு; ஒருவர் கைது; இருவர் தப்பியோட்டம்

காங்கேசன்துறை கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 54 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், இருவர் தப்பியோடியுள்ளதாக படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனையும் மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் கைதான நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தப்பிச் சென்ற இருவரையும் கைதுசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நுவரெலியாவில் கருத்தரங்கு





நுவரெலியா நிருபர்

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடி கருத்தரங்கு நேற்றுமுன்தினம்(06) நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பேரவையின் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பேரவையின் ஆயுள் காப்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், செயலாளர் பெரியசாமி, பொருளாளர் யோகேசன, காப்பாளர் மகேஸ்வரன் உட்பட உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (07.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 206.0556 | 218.3212 |
| கனேடியன் டொலர் | 233.6733 | 247.2576 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.5053 | 46.2379 |
| யூரோ | 345.3689 | 363.1197 |
| ஜப்பான் யென் | 2.2138 | 2.3246 |
| சிங்கப்பூர் டொலர் | 234.1673 | 246.7242 |
| ஸ்ரேலிங் பவுன் | 400.8343 | 420.1472 |
| சுவிஸ் பிரான்ங் | 356.8818 | 378.4923 |
| ஐ.அ. டொலர் | 315.0574 | 328.5784 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 844.7009 |
| குவைட் | குவைட் தினார் | 1,036.0613 |
| ஓமான் | ஓமான் றியால் | 827.1590 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.3945 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84.8833 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86.6962 |



# அரச மரத்தை பௌத்த தொல்லியல் சின்னமாக பிரகடனப்படுத்தியிருப்பது கண்டனத்துக்குரியது

## வட்டுக்கோட்டை தொகுதி செயற்பாட்டாளர் ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவிப்பு



யாழ். நிருபர்

சட்டவிரோதமான முறையில் - அடாத்தாக பறாளை முருகமூர்த்தி ஆலய தலவிருட்சமான அரசமரத்தை பௌத்த தொல்லியல் சின்னமாகப் பிரகடனப்படுத்தியிருப்பது கண்டனத்திற்குரியது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதி செயற்பாட்டாளருமான அருள்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்மக்களின் பண்டைக்கால வாழ்வியல் தொட்டு இயற்கை வழிபாட்டோடும் குறிப்பாக, சைவசமய நம்பிக்கை வழிபாடுகளோடு தல விருட்சங்களாக வணங்கி மதிப்பளிக்கப்பட்டு இரண்டறக் கலந்திருந்த அரசமரத்தை இன்று தமிழர்கள் அல்லது தமிழ் சைவர்கள் கண்டாலே அஞ்சுகின்ற நிலையை பௌத்த - சிங்கள பேரினவாதமும் வடக்கு, கிழக்கு தமிழருக்கு தொல்லை தரும் அமைப்பாக மாறியுள்ள அதன் தொல்லியல் திணைக்களமும் உருவாக்கியுள்ளன.

ஏற்கனவே சங்கமித்தை வந்து இறங்கிய இடம் எனக் குறிப்பிடப்பட்டு மாதகல் சம்பில்துறையில் பொதுமக்களுக்குச் சொந்தமான பல காணிகளை கடற்படையின் உதவியுடன் அடாத்தாக சுவீகரித்து பாரிய வழிபாட்டிடம் - தங்குமிடங்களை அமைத்துள்ளார்கள்.

தற்போது இது போதாதென்று சங்கமித்தையின் பெயரால் சுழிபுரம் பறாளாய் முருகமூர்த்தி ஆலய பழம்பெரும் தலவிருட்சமான அரச மரத்தை கோவில் நிர்வாகத்திற்கோ உரிய பிரதேச அரச நிர்வாக அலகுகளுக்கோ தெரிவிக்காது பொதுமக்களின் கருத்துகளைப் பெறாமலும் உரிய ஆய்வுகளின்றியும் அவசர அவசரமாக பௌத்த தொல்லியல் சின்னமாக வர்த்தமானியில் பிரசுரித்திருப்பதென்பது சைவ மதத்தின் பாரம்பரிய வழிபாட்டிடம் மீதான சமய ஒடுக்குமுறை என்பதோடு பௌத்தமத ஆக்கிரமிப்பாகவே இருக்கிறது.

கலாசார அமைச்சினதும் தொல்லியல் திணைக்களத்தினதும் இந்த அடாவடி செயல் கடுமையான கண்டனத்திற்குரியது. உடனடியாக இந்த வர்த்தமானி பிரசுரம் வாபஸ் பெறப்படவேண்டும்.

தமிழ் மக்களின் மத வழிபாட்டு சுதந்திரம் தொல்லியலின் பெயரால் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்ற குருந்தூர் மலை முதல் வெடுக்குநாறி இன்று பறளாய் என தொடர்கின்ற கதைகள் நிறுத்தப்படவேண்டும். இதற்காக கட்சி பேதங்களின்றி தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு வெகுஜன போராட்டங்களை ஒழுங்கமைப்பதோடு பாராளுமன்றத்திலும் இதனை வெளிப்படுத்தி குரல் கொடுப்பதோடு இராசதந்திர மட்டங்களிலும் இதற்காக செயற்படவேண்டும் - எனக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னாரில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்





மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தால் நேற்று திங்கட்கிழமை (7) காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வானது நேற்று திங்கட்கிழமை (7) காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி திருமதி ஜே.எம்.ஏ.யக்கோ பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்டான்லி டிமெல் கலந்துகொண்டார்.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், வைத்தியர் ஒஸ்மன் டெனி, அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேகரிப்பதன் மூலம் 'சுற்றாடலை பாதுகாத்தலும் முகாமைத்துவம் செய்தலும்' எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது முதல் கட்டமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இலத்திரனியல் கழிவுகளை மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர்.

நேற்று திங்கட்கிழமை (7) தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (11) வரை இலத்திரனியல் கழிவுகளை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒப்படைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோண்டாவிலில் இரண்டு வாள்களுடன் இளைஞன் கைது

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் இரண்டு வாள்களுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (06) ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு வாள்கள் மீட்கப்பட்டன.

அதனையடுத்து வீட்டில் வசிக்கும் இளைஞனை கைதுசெய்து , வாளுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்திய நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 'நட்பு மண்' எனும் மாதிரி பண்ணையின் சிறுவர் பகுதி சேந்தாங்குளத்தில் திறந்துவைப்பு









யாழ். நிருபர்

யாழ். எய்ட் நிறுவனத்தினரால் இளவாலை சேந்தாங்குளம் பகுதியில் நிறுவப்பட்ட 'நட்பு மண்' எனும் மாதிரி பண்ணையின் சிறுவர் பகுதி நேற்று முன்தினம் (06) ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

அமரர் சண்முகநாதன் தேசிகனின் ஞாபகார்த்தமாக அன்னாரின் சகோதரனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1995ஆம் ஆண்டு மாணவனுமான சண்முகநாதன் குருபரனின் நிதி அனுசரணையுடன் குறித்த மாதிரி பண்ணை உருவாக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சண்முகநாதன் குருபரனின் உறவினர்கள், யாழ். எய்ட் உத்தியோகத்தர்கள், தவத்திரு வேலன் சுவாமிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

சிறுவர்கள் மகிழ்ச்சியாக தமது பொழுது போக்கைக் கழிக்கும் வகையில் குறித்த மாதிரி பண்ணையில் பல விடயங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்பதிவு செய்துகொண்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு மாத்திரமே குறித்த மாதிரி பண்ணை முதற்கட்டமாகப் பார்வையிட அனுமதிக்கப்படவுள்ளதுடன், ஆரம்பகட்டமாக கட்டணமின்றியும் பின்னர் கட்டணத்துடனும் பண்ணையை பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மலையக எழுச்சிப் பயணத்துக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆதரவு




'வேர்களை மீட்டு உரிமைகளை வென்றிட' என்ற தலைப்பின் கீழ் மலையக மக்கள் கூட்டிணைவில் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மலையக எழுச்சிப் பயணத்திற்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் முழுமையான ஆதரவை வழங்குவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை பெருந்தோட்ட மலையக மக்களின் 200 வருட வரலாற்றை பறைசாற்றும் முகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மலையக எழுச்சி பயணத்திற்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தன்னுடைய முழுமையான ஆதரவை வழங்குவதோடு எமது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம் ."

மேலும் எதிர்வரும் 12ஆம் திகதி மாத்தளையில் உச்சம் தொடவிருக்கும் இச்சாதனை பயணத்தில் ஓர் அங்கமாக எமது தொப்புள்கொடி உறவுகளை வரவேற்பதற்கு நாமும் தயாராக இருக்கின்றோம் என்பதனையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

# கஞ்சா தோட்டம், உள்ளூர்த் துப்பாக்கி, கசிப்பு வைத்திருந்த மூவர் பொலிஸாரால் கைது

ராமு. தனராஜா

மூன்று கஞ்சா தோட்டங்கள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் கசிப்பு வைத்திருந்த மூவர் பண்டாரவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பண்டாரவளை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கொஸ்லந்தை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கொஸ்லந்தை, அளுத்வெவ, அம்பகொல்ல, ஆர மற்றும் நெவ்வார ஆகிய பகுதிகளில் மூன்று கஞ்சா தோட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இதில் 12 அடி உயரமான 1,800 கஞ்சா செடிகளும், 10 அடி உயரமான 1,650 கஞ்சா செடிகளும் பயிரிடுவதற்கு ஆயத்தமான நிலையில் தவரணையில் பயிரிடப்பட்டிருந்த அரை அடி உயரமான 15,000 கஞ்சா செடிகளும் என பண்டாரவளை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் 5000 மில்லி லீற்றர் கள்ளச்சாராயம் (கசிப்பு) என்பன மீட்கப்பட்டுள்ளதுடன், 42, 28, 50 வயதுகளையுடைய பாலாறுவ, ரன்மல்வின்ன, புத்தல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரை கைதுசெய்துள்ளதுடன், குறித்த சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மனிதநேயம் என்ற நிபுணத்துவம் எப்போதும் மாறாமல் நிலைத்திருக்க வேண்டிய ஒன்று

## பேராசிரியர் எம்.எஸ்.எம்.அஸ்லம் தெரிவிப்பு



கண்டி நிருபர்

உலகத்தில் உள்ள அனைத்து நிபுணத்துவமும் காலத்துக்குக் காலம் மாறலாம். ஆனால் , மனித நேயம் என்ற நிபுணத்துவம் என்றும் நிலைத்திருக்க வேண்டிய ஒன்று. அது மாற முடியாது; மாற்றவும் முடியாது.

- இவ்வாறு சப்ரகமுவ பல்கலைக் கழக சுற்றாடல் முகாமைத்துவத் துறைப் பேராசிரியர் கலாநிதி எம். எஸ்.எம். அஸ்லம் தெரிவித்தார்.

மடவளை ஹில்கன்றி ஆண்கள் பாடசாலையின் பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்று ரீதியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த சந்ததிகள் பிரத்தியேக இயல்புகளைக்கொண்ட சந்ததிகளாகவே இருந்துள்ளன. தற்போதைய நவீன காலத்தில் 2010ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட சந்ததிகளிடையே அதிகளவு சுயநலத்தைக் காண்கிறோம். அதேநேரம், அவர்களது நடத்தையை அதற்கு முற்பட்ட பரம்பரையினருடன் ஒப்பிடுகையில் குறைபாடுள்ள ஒன்றாகவே அது தோற்றமளிக்கிறது. இது கால வோட்டத்தில் நடக்கும் ஒரு மாற்றம். எனவே, நாம் மாணவர்களை மாணவர்களாக வாழ வழிகாட்ட வேண்டும் – என்றார்

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஐ.தே.கட்சி செயற்குழுத் தலைவராக நவீன் திசாநாயக்க மீண்டும் தெரிவு







இரத்தினபுரி நிருபர்

நுவரெலியா தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசிய கட்சி செயற்குழுத் தலைவராக சப்ரகமுவ மாகாண ஆளுநரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்டத் தலைவருமான நவீன் திசாநாயக்க மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

அத்துடன், நுவரெலியா தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழுவின் ஏனைய பதவிகளுக்கான உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நுவரெலியா தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழுக் கூட்டம் சனிக்கிழமை (05) நுவரெலியா மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சட்டத்தரனி அகிலவிராஜ் காரியவசம், வீ.புத்திரசிகாமணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளருமான சமன் ரத்னப்பிரிய, முன்னாள் பராளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாச, கொத்மலை தேர்தல் தொகுதியின் ஐ.தே.க. அமைப்பாளர் விஜேரத்ன தேவகெதர, ஐ.தே.க. நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# ஓய்வூதியம் பெறுவோரின் பொது அமைப்பு அக்குறணையில் ஆரம்பம்





கண்டி நிருபர்

அக்குறணை பிரதேசத்திலுள்ள ஓய்வூதியம் பெறுவோர்களது பொது அமைப்பு ஒன்று அண்மையில் அக்குறணையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அக்குறணை அராபா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி கண்டி கே.சி.சி. பூங்காவில் (சஹஸ் உயன) நடைபெறவுள்ள கண்டி மாவட்ட ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனக் கூட்டத்திற்கு முன்னோடியாக இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டின் பின் ஓய்வூதியம் பெற்றவர்களது பிரச்சினை தொடர்பாக இதில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. குறிப்பாக, 2018இன் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத் தொகை வழங்கப்படாமை, 2020இன் பின் ஓய்வு பெற்றவர்களுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படாமை, ஆசிரியர் சேவையில் வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பின் மூன்றில் இரண்டு பங்கு இன்னும் வழங்கப்படாமல் இருப்பது மற்றும் 2018 இற்கு முன் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேவைக்கான அதிகரித்த சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படாமை உட்பட பல்வேறு ஓய்வூதியப் பிரச்சினைகள் பற்றி இங்கு தீர்மானங்கள் நிறைவேற்றப் படவுள்ளதாக அங்கு தெரிவிக்கப் பட்டது.



**மாத்தளை கல்வி வலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டியில் மாத்தளை இரத்தோட்டை ஸ்ரீகுமரன் ஆரம்ப தமிழ் வித்தியாலயம் முதன்முறையாக பங்குபற்றி சாதனைப் படைத்துள்ளது. திறந்த பிரிவு போட்டியான வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல்களில் பங்குபற்றிய மாணவர்கள் இரு இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பங்குபற்றிய மாணவர்களுக்கும் அதிபர் ந.சந்திரசேகரன் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.**

**படம்:** இரத்தோட்டை

## அயோத்தி இராமருக்காக உலகின் மிகப் பெரிய பூட்டு




அயோத்தி இராமர் கோயிலுக்கு வழங்குவதற்காக, உத்தரபிரதேசம் அலிகர் பகுதியைச் சேர்ந்த பூட்டு தயாரிக்கும் மூத்த கலைஞர் ஒருவர், 400 கிலோ எடையில் பிரமாண்ட பூட்டொன்றை தயாரித்துள்ளார்.

அயோத்தி இராமர் கோயில் அடுத்தாண்டு ஜனவரியில் திறக்கப்படவுள்ளது. இந்நிலையில், தீவிர ராம பக்தரான சத்ய பிரகாஷ் சர்மா என்பவர் ராமர் கோயிலுக்கு நன்கொடையாக வழங்க கையால் செய்யப்பட்ட உலகின் மிகப் பெரிய பூட்டு ஒன்றை தயாரித்துள்ளார். இதன் உயரம் 10 அடி, அகலம் 4.5 அடி, தடிமன் 9.5 அங்குலம். இதன் எடை 400 கிலோ. இதன் சாவியின் நீளம் 4 அடியாகும்.



**தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று(07) அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் சென்னை மெரினாவிலுள்ள அவரது நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அமைச்சர்கள், தி.மு.க. எம்.பிக்கள், எம்.எல்.ஏக்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.**

# அணுஆயுதங்களை முற்றிலுமாக அழித்துவிடுக!

### உலக நாடுகளிடம் ஜப்பான் பிரதமர் கோரிக்கை




ஹிரோஷிமா பேரழிவின் 78ஆம் ஆண்டு நினைவு தினம் ஜப்பானில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹிரோஷிமாவில் அமைதி மணி ஒலிக்கப்பட்டு அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அணு ஆயுதத் தாக்குதலிலிருந்து தப்பித்து தற்போது தள்ளாத வயதிலுள்ள முதியவர்கள் உட்பட 50 ஆயிரம் பேர் இதில் பங்கேற்றனர்.

நினைவேந்தலில் பேசிய ஜப்பான் பிரதமர் அணு ஆயுதங்களை முற்றிலுமாக அழித்துவிடுமாறு உலக நாடுகளுக்கு கோரிக்கை வைத்தார்.

இந்நிலையில் ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டேரஸ் தமது ட்விட்டர் பக்கத்தில்,

"78 ஆண்டுகளுக்கு முன்பு, ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசப்பட்டது. அந்த வலி என்றுமே மறக்க முடியாத ஒன்று. ஹிரோஷிமா மக்களின் பக்கம் நான் நிற்கிறேன். அணு ஆயுதங்கள் மீண்டும் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய அயராது உழைக்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

கடந்த 1945ஆம் ஆண்டு இதே நாளில் (ஓகஸ்ட் 06) ஜப்பானின் ஹிரோஷிமா நகரம் நரகமாக மாறியிருந்தது. அதற்கு காரணம் 'லிட்டில் போய்' எனும் அணுகுண்டை அமெரிக்கா வீசியது தான்.

அந்த கொடூர நிகழ்வு நடந்து 78 ஆண்டுகள் கடந்துள்ளன. அந்த பேரழிவு ஏற்படுத்திய வடு இன்றும் ஆறாமல் உள்ளது. அன்றைய தினம் காலை 08:15 மணியளவில் அமெரிக்க போர் விமானம் 'லிட்டில் போய்' அணுகுண்டை ஹிரோஷிமா நகரம் மீது வீசியது. அடுத்த மூன்றாவது நாள் நாகசாகியில் 'ஃபேட் மேன்' அணுகுண்டை வீசியது அமெரிக்கா. இரண்டாம் உலகப்போரின்போது இந்த கொடூரம் நடந்தது.

ஹிரோஷிமாவில் மட்டும் 1.40 இலட்சம் மக்களின் உயிரை பறித்தது அணுகுண்டு. அந்த குண்டின் தாக்கம் நகரின் சில கிலோமீற்றர் தூரம் வரை இருந்தது. குண்டு வெடித்ததால் ஏற்பட்ட தீப்பிழம்பு பல ஆயிரம் அடிகளுக்கு மேல் எழுந்திருந்தது. உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் எண்ணிக்கையை முறையாக கணக்கிட ஜப்பானுக்கு சில மாதங்கள் தேவைப்பட்டன. வீசப்பட்டது அணுகுண்டு என்பதே குண்டு வீசப்பட்ட 16 மணி நேரத்துக்கு பின்னர் தான் தெரிந்தது.

அந்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஜப்பான், இன்று மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர்ந்து முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் அனைத்திலும் அந்த நாடு புதுமையை கடைப்பிடித்து வருவது தான்.

## மீண்டும் எம்.பியானார் ராகுல்காந்தி



ராகுல் காந்தியின் எம்.பி. பதவி தகுதி நீக்க உத்தரவை மக்களவைச் செயலகம் திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ள நிலையில் ராகுல் காந்தி மீண்டும் எம்.பி. பதவியை பெற்றுள்ளார்.

ராகுல்காந்தி மோடி சமூகம் குறித்து அவதூறு பேசியதாகத் தெரிவித்து பா.ஜ.கவைச் சேர்ந்த குஜராத் எம்.எல்.ஏவும் முன்னாள் அமைச்சருமான பூர்னேஷ் மோடி குஜராத் சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ராகுல் காந்தியை குற்றவாளியாக அறிவித்து அவருக்கு 02 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி சூரத் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் ராகுல்காந்தியின் எம்.பி. பதவியும் பறிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து குஜராத் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்நிலையில், ராகுல் காந்தியை எம்.பி. பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்திருந்த உத்தரவைத் திரும்பப் பெறுவதாக மக்களவைச் செயலகம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. 02ஆண்டுகள் சிறைத் தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்ததைத் தொடர்ந்து, 136 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் ராகுல் காந்தியின் எம்.பி. பதவி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிலவின் மேற்பரப்பை படம்பிடித்து அனுப்பியது சந்திரயான் - 3 விண்கலம்



நிலவின் வட்டப்பாதைக்குள் வெற்றிகரமாக செலுத்தப்பட்ட சந்திரயான் - 3 விண்கலம் நிலவு குறித்தான முதல் காட்சிகள் சிலவற்றை படம் பிடித்து அனுப்பியுள்ளது.

படிப்படியாக சந்திரனின் தூரத்தைக் குறைக்கும் பணியில் திட்டமிட்டு வெற்றிகரமாக செயற்பட்ட இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்றுமுன்தினம் சந்திரயான்- 3 விண்கலத்தை உள்வட்டப் பாதையில் உந்தி செலுத்தி சந்திரனை நெருங்கவைத்தனர். சந்திரயான் விண்கலம் இப்போது நிலவுக்கு 04 ஆயிரத்து 300 கிலோமீற்றர் தூரத்தில் இருப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மீண்டும் இதுபோன்ற திட்டமிட்ட முன்னகர்வு இன்று(08) பிற்பகல் 1 மணி முதல் 2 மணிக்குள் நடைபெறும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சந்திரயான்- 3 நிலவில் இறங்கி ஒரு நாள் ஆய்வு மேற்கொள்ளவுள்ளது. நிலவின் ஒருநாள் என்பது பூமியின் 14 நாட்களுக்கு நிகரானது.

'சந்திரயான் - 2' நிலவில் இறங்கி சேதமடைந்ததையடுத்து 'சந்திரயான் - 3' திட்டம் இஸ்ரோ விஞ்ஞானிகளால் 250 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, சீனாவைத் தொடர்ந்து வெற்றிகரமாக சந்திரனில் கால்பதிக்கும் நான்காவது நாடாக இந்தியா உள்ளது.

## திருமணத்துக்கு ஓகே; ஆனால் ஒரு நிபந்தனை

### ராகுல் காந்தியை திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்த நடிகை ஷெர்லின் சோப்ரா



பொலிவூட்டில் பிரபல நடிகையாக வலம் வருபவர் மொடல் அழகி ஷெர்லின் சோப்ரா. தமிழில் ஜீவன் நடிப்பில் 2002ஆம் ஆண்டு வெளியான 'யுனிவர்சிட்டி' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியிருந்தார். பின்பு தொடர்ந்து ஹிந்தியில் பல படங்கள் நடித்த நிலையில் 2018இற்கு பின்னர் எந்த படங்களும் அவரது நடிப்பில் வெளியாகவில்லை.

இந்நிலையில் ஷெர்லின் சோப்ரா, பேசிய வீடியோவொன்று சமூக வலைத்தளத்தில் வைரலாகியுள்ளது. அதில் ராகுல் காந்தி, பிரதமர் மோடி சமூகம் குறித்து பேசிய அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றம் கொடுத்த இரண்டாண்டு சிறைத் தண்டனையை உச்ச நீதிமன்றம் தற்போது நிறுத்திவைத்தது தொடர்பாக தனது வாழ்த்துகளை கூறுகிறார். அப்போது சோப்ராவிடம் ராகுலை திருமணம் செய்துகொள்ள தயாரா என்ற கேள்வி கேட்கப்படுகிறது. அதற்கு சிரித்து கொண்டே பதிலளித்த அவர், ''திருமணம் செய்து கொள்ள தயார். ஆனால், ஒரு நிபந்தனை. திருமணத்துக்கு பின்னர் என் பெயரில் இருக்கும் சோப்ராவை மாற்றக்கூடாது'' என பதிலளித்துள்ளார்.

# ஆசிய பசுபிக் மன்றத்தை இலங்கையில் நடத்தத் திட்டம்

### சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்



ஐந்தாவது ஆசிய பசுபிக் மன்றத்தை ஒக்டோபர் 03 முதல் 06 வரை கொழும்பில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டத்துடன் இணைந்து சுற்றாடல் அமைச்சு இதனை ஏற்பாடு செய்துள்ளதாகவும் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான (COP 28) 28ஆவது கூட்டத்தில், பாதிக்கப்படக்கூடிய மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான காலநிலை நியாய மன்றத்தை (Climate Justice Forum) இலங்கை ஆரம்பிக்கத் தயாராக உள்ளது.

காலநிலை நீதியை உறுதிப்படுத்துதல், இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு நிதியளிப்பதை துரிதப்படுத்துவதற்கு பாரம்பரியமற்ற மாற்று அணுகுமுறையை பேணும் பொதுவான நோக்கத்துடன், காலநிலை நியாய மன்றம் (Climate Justice Forum) ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை முன்மொழிந்துள்ளது.

இதேவேளை, தம்புள்ளை மற்றும் ஹிரிவடுன்ன பிரதேசங்களை சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை நாட்டின் காற்றின் தரப் பாதுகாப்பு நிலையை அறிக்கை அளிப்பதற்கான அவசரகால பதில் செயல் திட்டம் ஒன்றை ஏற்கனவே தயாரித்துள்ளது. அத்துடன் சுற்றாடல் அமைச்சு, மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை தயாரித்து வருகிறது.

புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் (GSMB), கனிம போக்குவரத்தை முறைமைப்படுத்தும் இலக்குடன், வாகன எண் மற்றும் வழித்தட விவரங்களுடன் கனிமப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்கத் தொடங்கியுள்ளது. இந்த விவரங்கள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது. கனிமப்பொருட்களை சட்டவிரோதமாக கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களை புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் (GSMB), தரவுத்தளக் கட்டமைப்பு மூலம் தடுப்புப்பட்டியலில் சேர்க்கும் நடைமுறையையும் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

சுரங்கங்கள் மற்றும் கனிமச் சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை திருத்தம் செய்யப்பட்டு, ஆய்வு அனுமதி நடைமுறைக்கு புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள கனிம வளங்களில் முதலீட்டாளர்கள் நேரடியாக, தரகர்களின் தலையீடு இல்லாமல் முதலீடு செய்வதற்கு வசதியாக மேலும் புதிய ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த முயற்சியை வெற்றியடையச் செய்வதற்காக, காலநிலை நியாய மன்றத்தை (Climate Justice Forum) நிறுவுவதற்கான ஆதரவாளராக சுற்றாடல் அமைச்சு முன்வைத்த மூலோபாய திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தேசிய காலநிலை மாற்றக் கொள்கையை உருவாக்குதல், தேசிய கனிமக் கொள்கையை உருவாக்குதல், இலங்கைக்கான தேசிய குளிரூட்டும் கொள்கையை உருவாக்குதல் போன்ற பல்வேறு கொள்கைகளை தயாரிக்கும் பணி, இந்த ஆண்டு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகளாகும்.

கழிவு முகாமைத்துவத்தின் கீழ் பிளாஸ்ரிக் பயன்பாடு மற்றும் மீள்சுழற்சிக்கும் புதிய விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏற்கனவே விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு விதிகளை இதில் இணைத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

## காலமானார்

**பு.கஜிந்தன்**



தென்னிந்திய திருச்சபையின் யாழ்.ஆதீனத்தின் முன்னாள் செயலாளரும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான டேவிட் சதாநந்தன் சொலமன் ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

இவர், கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் அதிபராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 'வேறாகா வேர்கள்' சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா





ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம் நடத்திய நஜ்முல் ஹுசைனின் ''வேறாகா வேர்கள்'' சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் (06) பிற்பகல் மருதானை அல்-ஹிதாயா தேசிய கல்லூரியின் எம்.சி. பஹார்தீன் கேட்போர் கூடத்தில் கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெற்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலை வகித்த இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டார்.

இதன்போது நூலின் முதல் பிரதியை டாக்டர் எம்.சீ.பஹார்தீன் பெற்றுக்கொண்டார்.

# ஜப்பான் நன்கொடையாக வழங்கிய 8,360 மெட்ரிக் தொன் யூரியா உரம்

### விவசாய அமைச்சரிடம் கையளிப்பு



பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 8,360 மெட்ரிக் தொன் யூரியா உரம், உணவு மற்றும் விவசாய அமைப்பினால் விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் அரசாங்கத்தின் நன்கொடையினூடாக இவ்வுரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுரமானது நாடளாவிய ரீதியில் 2,28,000 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

அதாவது குருநாகல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஒரு ஹெக்டெயர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கே வழங்கப்படவுள்ளன.

இதற்கிணங்க, 0.5 ஹெக்டெயர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இலவசமாக 25 கிலோ கிராமும் 01 ஹெக்டெயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 கிலோ கிராமும் வழங்கப்படும்.

கமத்தொழில் அமைச்சரான மஹிந்த அமரவீர குறிப்பிடுகையில், யூரியா உரம் கிடைக்கப்பெறுவது இலங்கையின் நிலையான மீட்சிக்கு வழிவகுக்கும். எமது விவசாயிகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதனூடாக, ஒரு வளமான மற்றும் நெகிழ்வுறுதி மிக்க விவசாயத்துறையின் வளர்ச்சியை நாம் ஊக்குவிக்கிறோம். இலங்கையின் குறுநில விவசாயிகளுக்கு வழங்கப்படக்கூடிய இந்தப் பெறுமதி மிக்க உதவிக்கு நான் ஜப்பானிய அரசாங்கத்துக்கும் ஜப்பானிய மக்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

ஜப்பானியத் தூதுவரான மிஸூகோஷி ஹிதெயாகி, இலங்கையின் விவசாயத்துறைக்கு ஆதரவளிப்பதற்கான ஜப்பானின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியதுடன் "இலங்கை அரசாங்கம் மற்றும் FAO கூட்டிணைந்த முயற்சியின் ஒரு அங்கமாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். நிலைபேறான நடைமுறைகளினூடாக குறுநில விவசாயிகளுக்கு வலுவூட்டும் எமது பகிரப்பட்ட குறிக்கோள் இந்த முன்னெடுப்புடன் நன்றாகப் பொருந்திப் போகின்றன. இவ்வுதவி இலங்கையின் விவசாய சமூகங்களின் முன்னேற்றத்துக்குக் கணிசமான பங்களிப்பை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" எனவும் கருத்துரைத்தார்.

இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான FAOவின் பிரதிநிதியான விம்லேந்திர ஷரண், நிலைபேறான விவசாயத்தை நோக்கிய நிறுவனத்தின் அர்ப்பணிப்பைக் கோடிட்டுக் காட்டிய அதே வேளை, இலங்கை விவசாயச் சமூகங்களுக்கு உதவி செய்வதன் அர்ப்பணிப்பையும் குறித்துக்காட்டி, "நிலைபேறான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்குமான அதன் குறிக்கோளில் FAO உறுதியாக உள்ளது. குறுநில விவசாயிகள் முகங்கொடுக்கும் சவால்களை நிவர்த்திப்பதற்கு நாடுகள் ஒன்றிணையும்போது நேர்மறையான விளைவுகளைக் கொண்டு வந்து சேர்க்கும் என்பதை ஜப்பானிய அரசாங்கம் மற்றும் கமத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் கூட்டிணைவு எடுத்துக்காட்டுகிறது" எனவும் குறிப்பிட்டார்.

FAO அதன் மதிப்புக்குரிய பங்காளர்களுடன் இணைந்து, இலங்கையில் விவசாயத்துறையை ஆதரிப்பதற்கான அர்ப்பணிப்பையும் நாட்டில் உணவுப் பாதுகாப்பை முன்னோக்கிக் கொண்டு செல்வதிலும் நெகிழ்வுறுதியுடன் கூடிய விவசாய-உணவுக் கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதிலும் ஒற்றுமையுடன் செயற்படுவதையும் மீண்டும் வலியுறுத்துகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது (FAO) வறுமையை ஒழிப்பதற்கான சர்வதேச முன்னெடுப்புகளை மேற்கொள்கிறது. விவசாயம், வனவியல், மீன்பிடி நடைமுறைகளைப் புதுமையாக்குவதற்கும் அவற்றை வலுவூட்டுவதற்கும் நாடுகளுக்கு உதவி புரிவதுடன் அவற்றை மேலும் நிலைபேறானதாக ஆக்கி, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறது. உலகில் வறுமை மற்றும் பட்டினியால் வாடும் கிராமப்புற மக்களை அபிவிருத்தியடையச் செய்வதில் FAO விசேட கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் திங்கட்கிழமை (07) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பூஜைகள் இடம்பெற்று 15ஆம் திகதி தேரோட்டம் நடைபெறும். அதனைத்தொடர்ந்து 16ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள தீர்த்தோற்சவத்துடன் ஆலய உற்சவம் நிறைவுபெறும்.

படம்: கல்லடி செய்தியாளர்

## மாணவன் துஷ்பிரயோகம்
# சந்தேகநபரான உடற்கல்வி ஆசிரியர் பொலிஸில் சரண்

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவரை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியர் நிந்தவூர் பொலிஸில் ஞாயிற்றுக்கிழமை(06) மாலை சரணடைந்துள்ளார்.

தலைமறைவாகியிருந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை பொலிஸார் தேடிவந்த நிலையில், தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் சந்தேக நபரை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்ப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீம் தெரிவித்தார்.

ஓகஸ்ட் 02ஆம் திகதி பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகிய மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபரான ஆசிரியர் தலைமறைவாகியிருந்தார்.

குறித்த சந்தேக நபரான ஆசிரியர் அம்பாறை, நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ளதுடன் கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை துஷ்பிரயோக முயற்சிக்குட்படுத்தியதாக அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

குறித்த சம்பவம் இடம்பெற்று இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, இச்சம்பவம் குறித்து நிந்தவூர் பொலிஸார் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தரம் 09இல் கல்வி கற்கின்ற குறித்த மாணவனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்றுச்சென்றிருந்ததுடன் மாணவனை துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், பாலியல் துஷ்பிரயோக முயற்சிக்குட்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படும் மாணவன் 02ஆம் திகதி புதன்கிழமை மாலை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வாக்குமூலங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு அனுபவக் கற்கை கள விஜயம்

மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கைத்தொழில் துறையில் ஈடுபடும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வடபகுதியில் உள்ளூர் வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் நாலாவித உற்பத்திப் பொருட்களையும் கைத்தொழிற்றுறை சார்ந்த நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட வடபகுதிக்கான அனுபவக் கற்கை கள விஜயம் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் (06,07) இரு தினங்களாக இடம்பெற்றன.

கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களின் உற்பத்தியாளர்களினால் மேற்கொள்ளப்படும் விவசாய உணவு உற்பத்திகள், ஏனைய பாவனைப் பொருட்கள், ஆயுர்வேத மருந்துப் பொருட்கள், துறைசார்ந்த உற்பத்திப் பொருட்கள் இக்கள விஜயத்தின்போது பார்வையிடப்பட்டன.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அனுபவக் கற்கை கள விஜயத்தின்போது இரு மாவட்டங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர் - யுவதிகள், பெண்கள் மற்றும் நலிவடைந்த கைத்தொழிற்றுறை உற்பத்தியாளர்கள் என சுமார் 60 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

இதன்போது, உள்ளூரில் கிடைக்கக்கூடிய இயற்கை வளங்களைக் கொண்டு நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய தொழிற்றுறைகளை மேற்கொள்ளும் முகமாக கைத்தொழிற்றுறை சார்ந்தோருக்கிடையில் அனுபவப் பகிர்வை மேற்கொண்டு வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.





வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு இடம்பெறும் நலிவடைந்த சமூக, பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டம் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

திருமலை மேலதிக செய்தியாளர், அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை-குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளவக்குளம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(06) மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் தோப்பூரைச் சேர்ந்த 31வயதான அப்துர்ரஹ்மான் அன்சார் (சுஜா) என தெரியவருகிறது.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றதாக ஆரம்பகட்ட விசாரணைமூலம் தெரியவந்துள்ளது.

சடலம் சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் குச்சவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



சாய்ந்தமருது அஸ்மியா அஷ்ரப் எழுதிய "நேந்தம்பியும் நிலாப் பெண்ணும்" எனும் நாவல் வெளியீட்டு விழா சாய்ந்தமருது கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது. இதன்போது சட்டம், ஒழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஏ.எல்.எல்.சலீமுக்கு நாவலாசிரியை அஸ்மியா அஷ்ரப் நூலொன்றைக் கையளித்தார்.

# கிண்ணியா பிரதேச பாரம்பரிய கலைஞர்களின் ஒன்றுகூடல்



சீனக்குடா செய்தியாளர்

கிண்ணியா பிரதேச பாரம்பரிய கலைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(05) இடம்பெற்றது.

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தொலஸ் மகே பஹன எனும் வேலைத்திட்டத்தின் கீழ், கிண்ணியா பிரதேச செயலக கலாசார அதிகார சபையினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மது கனி தலைமையில், நடைபெற்ற இந்நிகழ்வில், கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் மற்றும் கிண்ணியா பிரதேச பாரம்பரிய கலைத்துறை சார்ந்த முக்கிய கலைஞர்கள் கலந்து கொண்டு கலைத் திறமைகளை வெளிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை கிரிக்கெட் நடுவர் போட்டிப் பரீட்சையில் (தரம் 5) சித்தியடைந்த மருதமுனையைச் சேர்ந்த நடுவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் ஏ.முஹம்மட் அன்சார் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது. மருதமுனையைச் சேர்ந்த சூடான் நாட்டில் பணிபுரியும் UN - IOM நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எம்.றினாஸ் செய்னுலாப்தீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நடுவர் பரீட்சையில் சித்தியடைந்த எம்.என்.முஹம்மட் நாஜித், எம்.எஸ்.எம்.சிராஸ், ஏ.டபிள்யூ.றிஸ்வி மஹ்மூத் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

படங்கள்: பெரியநீலாவணை செய்தியாளர்



அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்கா அக்கறைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.சபீஸால் சனிக்கிழமை(05) திறந்துவைக்கப்பட்டது. இதன்போது பள்ளிவாசல் தலைவரினால் இப்பூங்கா அமைய ஒத்துழைப்பு வழங்கிய ஜமாஅத்தினர், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்தார்.

படங்கள்: மாளிகைக்காடு செய்தியாளர்

# சமுர்த்தி பயனாளிகளின் வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடல்



ஆலையடிவேம்பு செய்தியாளர்

சமுர்த்தி சௌபாக்கியா வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளில் வீடற்றவர்களுக்கான வீடுகளை அமைத்துக்கொடுக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவு கண்ணகி கிராமம் மற்றும் அலிக்கம்பை பிரிவுகளில் அமைத்துக்கொடுக்கப்படவுள்ள வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு திங்கட்கிழமை(07) நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் அறிவுறுத்தலுக்கமைய சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் வழிகாட்டலில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், கருத்திட்ட முகாமையாளர் கமலப்பிரபா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் கவிதா, சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த வீடமைப்புக்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 7இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் பயனாளர்களின் பங்களிப்பாக 04 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் இவ்வீடமைப்புக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

# சாய்ந்தமருது ஜன்னாவிற்கு புதிய அதிபர் நியமனம்



மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனை சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தியாலய புதிய அதிபராக கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலய பதில் அதிபராகவும் மற்றும் பிரதியதிபராகவும் கடமையாற்றிய எம்.ஏ.அஸ்தர் அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை அதிபர் சேவை தரத்தைக் கொண்ட இவர், கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க மற்றும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் ஆகியோரின் கடிதத்தின் பிரகாரம் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும் கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலீக், பாடசாலையின் தற்காலிக அதிபராகக் கடமையாற்றிய அதிபர் எஸ்.அல் சப்ரியிடமிருந்து புதிய அதிபருக்கான பொறுப்புகளைப் பெற்றுக் கையளித்தார்.

கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியும் கல்முனை வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எவ்.நஸ்மியா சனூஸ், கல்முனை சட்டத்தரணிகள் சங்க உதவி தலைவரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், கல்முனை சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சாரிக் காரியப்பர், சாய்ந்தமருது ரியாழுல் ஜன்னா வித்தியாலய முன்னாள் அதிபர்கள், காரைதீவு, கல்முனை, சாய்ந்தமருது கோட்டங்களின் அதிபர்கள், பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், புதிய அதிபரின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) அதன் 104ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு க.பொ.த. உயர்தர துறைசார்ந்த மாணவர்களுக்கிடையே பொதுஅறிவு வினா - விடைப் போட்டியை நடத்தியது. அதிபர் எம்.சபேஸ்குமாரின் வழிகாட்டலிலும் உதவி அதிபர் ஆ.கலாபராஜனின் நெறிப்படுத்தலிலும் மற்றும் பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்களது பங்களிப்புடனும் போட்டிகள் நடைபெற்றன. இறுதிப்போட்டியில் கலைப்பிரிவு மாணவர்கள் முதலாம் இடத்தையும் விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் கணிதப்பிரிவு மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். சிறந்த மாணவருக்கான விருதை கலைப்பிரிவு மாணவன் வீ.ஹரேந்திரன் பெற்றுக்கொண்டார்.

படம்: நிந்தவூர் செய்தியாளர்

# அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளராக ஸாஹிர்

நிந்தவூர் செய்தியாளர்

கல்முனை கல்வி மாவட்டத்தின் பொறியியலாளராக கல்முனை வலய பணிமனையில் கடமையாற்றிய சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர் பதவி உயர்வுபெற்று அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

கல்முனை கட்டடத் திணைக்களத்தில் பிரதம பொறியியலாளராக நீண்டகாலம் சேவையாற்றிய இவர், 09ஆம் திகதி புதன்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் கடமையேற்கவுள்ளார்.

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். சாய்ந்தமருது



அல்-ஹிலால் வித்தியாலய அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும் சாய்ந்தமருது நலன்புரி அமைப்பின்(SWF) செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். மேலும் இளைஞர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் அவ்வப்போது தனது பங்களிப்பைச் செய்து வருகின்றமை அவரது பணிகளில் ஒன்றாகும்.

# ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்ததே எதிர்க்கட்சித் தலைவர் புரிந்த சாதனை

## ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார கல்முனையில் தெரிவிப்பு

சாய்ந்தமருது செய்தியாளர்

சஜித் ஒரு குழப்பவாதி. கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றும் வல்லமை மிக்க ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்ததே அவர் புரிந்த சாதனையாகும். மேலும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எவ்வித திட்டமும் சஜித் பிரேமதாசவிடம் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

மேலும், அரகலய போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்முனையில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளிலேயே அதிகம் ஈடுபடுவார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ஒற்றுமைக்காகப் பாடுபடுகின்ற ஒரு தலைவராகத் திகழ்கிறார். ஏனென்றால், அவருக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் கிடையாது. இன்று பல தரப்பையும் ஒன்றிணைத்து நாட்டை முன்னோக்கிக்கொண்டு செல்கிறார். அதனால்தான் அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கின்ற பொருளாதாரத்தை மீட்டெடுத்து நாட்டைக் கட்டியெழுப்புகின்ற திட்டங்களுடன் முழுமூச்சாக செயற்படுகின்ற ஜனாதிபதி ரணிலுடன் இன்று



உலக நாடுகளின் தலைவர்கள் கைகோர்த்துள்ளனர்.

ஒரு வருடத்துக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை மீட்டிப்பாருங்கள். மக்கள் நடுத்தெருக்களில் வரிசைகளில் அல்லல்பட்டனர். சிலர் தெருக்களிலேயே மரணித்தனர். மக்கள் நிம்மதியிழந்து துன்பப்பட்டனர். உரிய தருணத்தில் ஜனாதிபதி ரணில் துணிச்சலுடன் முன்வந்து நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்? நிலைமை இன்னும் படுமோசமான நிலைக்குச் சென்றிருக்கும்.

எமது தேசமும் சர்வதேசமும் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கிறார். அவர் ஜனாதிபதியாக நீடிக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் பாராளுமன்றத் தேர்தலோ மாகாண சபைத் தேர்தலோ உள்ளூராட்சித் தேர்தலோ அவசியமில்லை. இவற்றால் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். அதனை அவர் வெற்றிகரமாக முன்கொண்டு செல்கிறார்.

ஆகையினால், ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அவரது இருப்பு உறுதிசெய்யப்பட வேண்டும். அரகலய போராட்டக்காரர்கள் வேண்டி நிற்கின்ற System Change - முறைமை மாற்றம் தொடர்பிலான முன்மொழிவுகள், கோரிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும் - என்றார்.

# காணி நடமாடும் சேவைகளை நடத்தி இல்லாதவர்களுக்கு நிலங்களை பகிர்ந்தளியுங்கள்

## பிரதேச செயலாளர்களுக்கு சாணக்கியன் எம்.பி. அறிவுரை

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

நாவலடி சந்தியிலிருந்து மட்டக்களப்பு எல்லை வரைக்கும் காணிகளில் அபகரிப்பு நடக்கிறது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அப்பகுதி பிரதேச செயலாளர்கள் காணி நடமாடும் சேவை (காணிக் கச்சேரி) நடத்தி காணி இல்லாதவர்களுக்கு அதைக் கொடுக்கக்கூடிய வழிகள் இருந்தால் அதைப் பகிர்ந்தளியுங்கள் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாவலடி - கொழும்பு பிரதான வீதியில் மட்டக்களப்பு எல்லை வரை புகையிரதப் பாதையை அண்மித்த பகுதியில் உள்ள காணிகள் சட்டவிரோதமான முறையில் அபகரிப்பு இடம்பெற்று வருவதைக் கண்டறியும் முகமாக ஞாயிற்றுக்கிழமை(06) அங்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் அங்கிருந்த பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இவ்விடயத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் விரும்பியவாறு காணி அபகரிப்புக்கு அனுமதி வழங்கினால் இந்த மாவட்டம் முழுவதும்



பறிபோகும். இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர், மகாவலி அமைச்சர், ஆளுநர், பிரதேச செயலாளர் ஆகியோருடன் பேசித்தான் தீர்வு காணப்படவேண்டும்.

தவறுதலாக வேலிகளை அமைத்த விடயத்தை சீர் செய்வதாக மகாவலி அதிகார சபையும் பொலிஸாரும் வாக்குறுதி தந்துள்ளனர். மேலும், அரசியல் தலைவர்கள் சரியான தலைமைத்துவப் பண்புகளுடன் தலைவர்களாக இருந்து இந்த மாவட்டத்துக்குத் தேவையானதை, பொருத்தமானதைச் செய்தால் மட்டும்தான் மக்களும் அதைப் பின்பற்றுவார்கள். அரசியல்வாதிகளும் பிழைகளை விட்டால் மக்களும் அதேயே பின்பற்றுவார்கள் - என்றார்.

இதன்போது குறித்த பிரதேசத்துக்கு வருகைதந்த மட்டக்களப்பு மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் தலைவரான அ.ரமேஸ் காணி தொடர்பான சட்டங்களை தெளிவுபடுத்தினார்.

குறித்த பிரதேசத்தில் கடந்த 02 வாரங்களாக காணி அபகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மௌனம் காத்து வருகின்றன. வீதி அருகில் காணப்படும் காடுகள் அழிக்கப்பட்டு இரவோடு இரவாக வேலிகள் அமைக்கப்பட்டு தற்காலிக வீடுகள், கடைகள் அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நடவடிக்கையினால் சமூகங்களுக்கிடையில் குழப்பநிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதேவேளை, குறித்த செயற்பாட்டை தடுக்கக்கோரி பிரதேச கிராம சேவகர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கழிவுகளை முகாமை செய்யும் கலந்தாலோசனைக் கூட்டம்

மாளிகைக்காடு செய்தியாளர்

வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் சுகாதாரப் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய பொதுச் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.எம்.ஹில்மியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்தாலோசனைக் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ. வாஜித் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரிவுத் தலைவர்களும் வைத்திய அத்தியட்சகர்களும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் பிரதேச வைத்திய அதிகாரிகள் மற்றும் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் கல்முனை பிராந்தியத்தில் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் குறித்த கழிவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி குறித்த திட்டத்தை விரிவுபடுத்தி அதனூடாக பொறுப்பு வாய்ந்த முறைமை ஒன்றைக் கட்டியெழுப்புவதுடன் அது தொடர்பான வழிகாட்டல் மற்றும் சுகாதார உதவிகளை பொதுச் சுகாதாரப் பிரிவினூடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும்



கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கருத்திட்டத்துக்கமைவாக உருவாக்கப்பட்ட வள முகாமைத்துவ செயற்றிட்டத்தின் கீழ் பெறப்பட்ட உபகரணங்கள் இதற்கென விசேடமாக பயன்படுத்தப்படவுள்ளதுடன் விரைவில் இக்கழிவுகளை அகற்றும் செயல் முறையை மேற்பார்வை செய்வதற்கென கள விஜயம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களில் இக்கழிவு அகற்றும் இயந்திரப் பொறிமுறை அற்ற வைத்தியசாலைகளை கொத்தணியாக்கி இத்திட்டத்தை முகாமை செய்யவுள்ளதுடன் தனியார் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் தொற்றுக்கழிவுகளை முகாமை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வெற்றிகரமான இத்திட்டத்தை ஏனைய பிராந்தியங்களிலும் எதிர்காலத்தில் அமுல்படுத்தவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபையில் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலகம்

## ஊழல், மோசடிகளுக்கு இனி இடமில்லை என்கிறார் ஆணையாளர்

சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனை மாநகர சபையின் சேவைகளை மக்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்கும் வரிகள் மற்றும் சேவைக் கட்டணங்களை அசௌகரியம் எதுவுமின்றி இலகுவாகவும் விரைவாகவும் செலுத்துவதற்குமான வசதிகள் கொண்டதாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முகப்பு அலுவலகம் (Front Office) ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மக்கள் செலுத்திய வரிப்பணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் சிலரால் கையாடல் செய்யப்பட்ட துரதிர்ஷ்டமான சம்பவங்களையடுத்து மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்ற நம்பிக்கையீனம் களையப்பட்டு, இக்கொடுப்பனவுகள் ஒழுங்கு முறையாக அறவீடு செய்யப்பட்டு, முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவற்றைக் கொண்டு மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகள் வழங்குவதற்கும் தற்போதைய மாநகர சபை நிர்வாகம் திடசங்கற்பம் பூண்டிருக்கிறது.

கல்முனை மாநகர சபையில் இவ்வாறான முகப்பு அலுவலக முறைமை செயற்படுத்தப்படாமையே கடந்த காலங்களில் நிதி மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெறுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.

இக்குறைபாட்டை நிவர்த்திசெய்து வரி அறவீடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதை இலக்காகக் கொண்டே எமது மாநகர சபையிலும் முகப்பு அலுவலகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



இதுவொரு புதிய விடயம் அல்ல என்கின்றபோதிலும், எமது மாநகர சபைக்கு இதுவொரு புத்தாக்க முயற்சியாகும். பொது மக்கள் நலன் கருதி உள்ளூராட்சி மன்றங்களில் காரியாலய வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சபையின் வழிகாட்டலில் முகப்பு அலுவலக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைவாகவே கல்முனை மாநகர சபையிலும் முகப்பு அலுவலகம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென விசேட செயலி (Software) ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அரச அங்கீகாரம் பெற்ற வயம்ப அபிவிருத்தி அதிகார சபை எனும் நிறுவனம் இச்செயலியை வடிவமைத்துள்ளது. வங்கி முறைமையை ஒத்ததாக இச்சேவை அமையப்பெறவுள்ளது. வங்கி அட்டை மூலமும் ஒன்லைன் மூலமாக வீட்டில் இருந்தவாறும் மக்கள் தமது கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான வசதிகளைக் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட முறையில் எவரும் நிதிக்கையாடலில் ஈடுபட முடியாதவாறு மிக நம்பகமானதும் பாதுகாப்பு மிக்கதாகவும் இச்செயலி அமையப் பெற்றிருக்கிறது. இதன்மூலம் மக்கள் தமது வரிகளையும் சேவைக் கட்டணங்களையும் நேரடியாகவும் ஒன்லைன் மூலமாகவும் எவ்வித ஐயமுமின்றி மிக இலகுவாகவும் விரைவாகவும் செலுத்திக்கொள்ள முடியும். இதற்கு எமது மாநகர சபை நிர்வாகம் மிகவும் பொறுப்புடமையுடன் உத்தரவாதமளிக்கிறது.

மேலும், மாநகர சபையில் அமைக்கப்படுகின்ற முகப்பு அலுவலகம் மூலம் மாநகர சபையின் சேவைகள் வினைத்திறன் மிக்கதாக முன்கொண்டு செல்லப்படவுள்ளன. இம்முகப்பு அலுவலகத்தில் மக்கள் குறைகேள் பிரிவும் செயற்படவுள்ளது. மாநகர சபையின் எந்தவொரு சேவை தொடர்பிலும் குறிப்பாக, தெரு விளக்கு பராமரிப்பு, திண்மக் கழிவகற்றல், வடிகான் பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் தொடர்பிலான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கும் அவற்றை நிவர்த்தி செய்து கொடுப்பதற்குமான கருமபீடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அத்துடன், மக்கள் தமது முறைப்பாடுகளை வீட்டில் இருந்தவாறு மேற்கொள்வதற்கும் தீர்வுகளை அறிந்துகொள்வதற்குமான மங்கிவ்வா எனும் செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை மாநகர சபையில் மிக விரைவில் முகப்பு அலுவலகம் செயற்படத் தொடங்கியதும் கல்முனை மாநகர மக்கள் அதன் பயன்களை அனுபவிக்க முடியும் என்ற மகிழ்ச்சியான செய்தியை பெருமையுடன் அறியத் தருகின்றோம் - என்றார்.

# நற்பிட்டிமுனைச் சந்தியில் சுற்றுவழி அமைக்க கோரிக்கை

நற்பிட்டிமுனை செய்தியாளர்

கல்முனை பிராந்திய மக்களின் போக்குவரத்து நலன்கருதி நற்பிட்டிமுனை சந்தியில் உடைந்துபோன சுற்றுவழியை மீளக் கட்டித்தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அம்பாறை, சென்ரல்கேம்ப், சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் இருந்து கல்முனைப் பிராந்தியத்துக்கு பல்வேறு தேவைக்கு வருவோர் இதனால் மிகச் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நற்பிட்டிமுனை சந்திச் சுற்றுவழி, கல்முனை - மருதமுனை என இரண்டாகப் பிரிவதால் மட்டக்களப்பு அல்லது கல்முனை வழி செல்வதற்கு பயணம் செய்வோர் பொதுமக்களின் உதவியை நாடுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

தூரப்பிரதேசங்களில் இருந்து வரும் மக்கள் பலருக்கு மொழியறிவு இல்லாததால் இன்னும் தொடர்ச்சியாக பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், மட்டக்களப்பு, கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் இருந்து அம்பாறை மத்தியமுகாம் சம்மாந்துறை பிரதேசங்களுக்கு செல்லும் பிரயாணிகளும் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே, இப்பிரச்சினை தீர இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் துரித முயற்சியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நெல்லுக்கான நிர்ணய விலை பெற்றுத் தருமாறு கோரிக்கை

கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட கரைச்சல் திடல் விவசாய நிலப் பகுதியில் நெல் அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது. இருந்தபோதிலும், இம்முறை சிறுபோகச் செய்கை அறுவடையில் பாரிய நஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் சுமார் 350 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை இடம்பெற்று வருகின்றது. தங்களுக்கான நெல் கொள்வனவில் நிர்ணய விலை இன்மை, வெட்டுக் கூலி அதிகம், விளைச்சல் குறைவு என பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தனியார் உரிமையாளர்களே நெல்லை கொள்வனவு செய்கின்றனர். நிர்ணய விலை இன்மையால் பாரிய நஷ்டம். இலாபமற்ற அறுவடை எஞ்சியுள்ளதாகவும் அரசாங்கம் இதற்கு சாதகமான பதில்களை விவசாயிகளுக்கு வழங்கி நிர்ணய விலையை அறிவிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 15 தொடக்கம் 20 ஏக்கர் வரையே விளைச்சல் கிடைத்துள்ளது. எல்லாக் கூலிகளும் போக எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. நெல்லின் விலை ஒரு மூடை சாதாரணமாக 5,000 ரூபா வரையே செல்கிறது. இதற்காக அரசாங்கம் சரியான பதிலைத் தர வேண்டும். விவசாயத்தை நம்பியே நாங்கள் வாழ்கின்றோம் எனவும் தெரிவிக்கின்றனர்.

அரக்கொட்டியான் அடித்து ஒரு வகை மஞ்சள் நோய்த் தாக்கம் ஏற்பட்டதாலும் விளைச்சல் குறைவு. அரசாங்க களஞ்சியசாலை பாழடைந்து காணப்படுகிறது. எனவே, நிர்ணய விலையை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.




மூதூர் வலயத்துக்குட்பட்ட ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு திங்கட்கிழமை(07) மூதூர் அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்ததோடு வளவாளராக சட்டத்தரணி அ.ரே.நிரோஷன் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# போழியார் புலம்பல்!



***ஜனாதிபதி வேட்பாளருக்கு சஜித் பொருத்தமில்லையாம் எண்டு நம்மட கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 2013இல் இறக்குமதி செய்யப்பட்ட நம்மட விக்கி ஐயா சொல்லிப்போட்டாரு எலுவா..., இந்த விக்கியரே 2013, தொடக்கம் 2018 வரை வட மாகாணசபய பொருத்தம் இல்லாம நடத்திய முதலமைச்சர் எலுவா..? இவரு போயும் போயும் சிங்கள வேட்பாளர் சஜித் பொருத்தமில்ல என சும்மா கூறல்ல... அவரிட ரெண்டு புள்ளங்களும் சிங்கள பொம்புலயல கலியாணம் கட்டி ரணிலுக்கு ஆதரவாக சொந்தம் கொண்டாடுறது தாத்தாவுக்கு தெரிஞ்சுதான் இப்பவே ரணிலுக்கு செம்பு தூக்கிறாரு போல...!***

# பட்டிருப்புப் பாலமூடாகப் போக்குவரத்தில் அவதி



கல்லடி செய்தியாளர்

படுவான்கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் முக்கிய பாலங்களில் ஒன்றாகக் காணப்படும் பட்டிருப்புப் பாலம் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் இப்பாலத்தினூடாக வாகனங்களில் பயணிப்போர் பல்வேறு கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இப்பாலத்திலிருந்து பெரியபோரதீவுச் சந்தி வரையிலான பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால் இப்பாதையூடான போக்குவரத்தில் தாம் இன்னல்களை அனுபவித்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்நிலைமையைச் சீர்செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென பொதுமக்கள் மற்றும் அரசதுறை ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## விளையாட்டுத் துளிகள்

சென்னையில் நடைபெற்றுவரும் 6 அணிகள் பங்கேற்கும் 7ஆவது ஆசிய சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கி தொடரின் லீக் போட்டியில் இந்திய அணி மலேசியாவை 5-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தொடரில் இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது.

கிரிக்கெட் ஜாம்பவானும், யுனிசெப் நிறுவனத்தின் தெற்காசியாவுக்கான பிராந்திய தூதுவருமான சச்சின் டெண்டுல்கர் நேற்று இலங்கைக்கு வருகைதந்தார். நேற்று தெஹியோவிட்டவில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சச்சின், இன்று கொழும்பு சினமன் லேக்சைட்டில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் கலந்துகொள்ளவுள்ளார். இந்த நிகழ்வின் நோக்கம் கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை வெளிக்காட்டுவதாகும்.

2023 பொதுநலவாய இளையோர் விளையாட்டு விழா மேற்கிந்தியத் தீவுகளின் போர்ட் ஒவ் ஸ்பெயினில் ட்ரின்பாகோவின் பிரம்மாண்டமான ஆரம்ப விழா வைபவத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. 7ஆவது தடவையாக நடத்தப்படும் பொதுநலவாய இளையோர் விளையாட்டு விழாவில் இலங்கையிலிருந்து 7 வீரர்களும், 4 வீராங்கனைகளுமாக மொத்தம் 11 பேர் பங்குபற்றுகின்றனர்.

ட்ரின்பாகோவில் நடைபெற்றுவரும் 2023 பொதுநலவாய இளையோர் விளையாட்டு விழாவில் அவுஸ்திரேலிய வீராங்கனை லோரென் பேட்ஸ், 10 கிலோ மீற்றர் நேரக் கணிப்பு சைக்கிளோட்டப் போட்டியை 14 மணித்தியாலங்கள் 09 நிமிடங்கள் 31 செக்கன்களில் நிறைவு செய்து இந்தத் தொடரின் முதல் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஆசியக்கிண்ண குழாமில் மெத்யூஸுக்கு இடமில்லை !




இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியின் குழாம் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

தசுன் சானக்க தலைமையிலான குழாமில் இரண்டு வருடங்களின் பின்னர் நட்சத்திர ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா இலங்கை ஒருநாள் அணி குழாமில் இணைக்கப்பட்டுள்ளதுடன், துனித் வெல்லாலகேவும் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் துஷ்மந்த சமீர, லஹிரு குமார மற்றும் மதீஷ பத்திரன ஆகியோரும் குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், அனுபவ வீரர் அஞ்சலோ மெத்யூஸ் மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் குறித்த குழாமில் இடம்பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

**இலங்கை அணியின் குழாம்**

தசுன் ஷானக, பெத்தும் நிஸ்ஸங்க, திமுத் கருணாரத்ன, குசல் ஜனித் பெரேரா, குசல் மெண்டிஸ், சரித் அசலங்கா, சதீர சமரவிக்ரம, தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க, துனித் வெல்லலகே, மகேஷ் தீக்ஷனா, லஹிரு குமார, துஷ்மந்த சமீர, தில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரன.

**மேலதிக வீரர்கள்**

அவிஷ்க பெர்னாண்டோ, கசுன் ராஜித, துஷான் ஹேமந்த, சாமிக்க கருணாரத்ன, சஹான் ஆரச்சிகே.



# முதல் முறையாக தங்கம் வென்ற இந்தியா

ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் நடைபெறும் உலக வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா தங்கம் வென்றுள்ளது. உலக வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.

ஜோதி சுரேகா வெண்ணம், பர்னீத் கவுர், அதிதி கோபிசந்த் சுவாமி ஆகியோர் அடங்கிய மகளிர் கூட்டு அணி இந்தியாவுக்காக தங்கம் வென்றது. இரண்டாம் நிலை இந்திய மகளிர் கூட்டு அணி அரையிறுதியில் நடப்பு சம்பியன் கொலம்பியாவை 220-216 என்ற கணக்கில் தோற்கடித்தது.

இதற்கு முன், உலக வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா ஒன்பது வெள்ளி, இரண்டு வெண்கலம் உட்பட 11 பதக்கங்களை வென்றிருந்தது. இந்தத் தங்கம் 2017 மற்றும் 2021இல் வெள்ளி, 2019இல் வெண்கலம் வென்ற பிறகு, உலக சம்பியன்ஷிப் மகளிர் அணியில் இந்தியா பெற்ற தொடர் நான்காவது பதக்கமாகும்.

ஜோதி சுரேகா பதக்கம் வென்ற நான்கு அணிகளிலும் உறுப்பினராக இருந்தது நட்சத்திரத்திற்கு சிறப்பான சாதனையை அளித்தது.

## இன்றைய போட்டிகள்

LPL T20
LANKA PREMIER LEAGUE 2023

கண்டி எதிர் காலி (பி.ப. - 3.00)

கொழும்பு எதிர் ஜவ்னா (இரவு - 7.00)

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டுச் செய்திகளை 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.




# நடப்பு சம்பியன் அமெரிக்காவை பெனால்டியில் வெளியேற்றிய சுவீடன்

ஒன்பதாவது பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரில் சுவீடன் அணியிடம் பெனால்டியில் தோல்விகண்ட நடப்பு சம்பியனும், அதிக தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற அணியுமான அமெரிக்கா தொடரிலிருந்து வெளியேற, சுவீடன் காலிறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஆஸி. மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் குறித்த உலகக்கிண்ணத் தொடரில் மெல்பேர்ன் ரெக்டாங்குலர் மைதானத்தில் நடந்த ரவுண்ட் ஒவ் 16 சுற்றுப் போட்டியில் சுவீடன் மற்றும் அமெரிக்கா அணிகள் மோதின.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதியதால் கடைசி வரை கோல் எதுவும் விழவில்லை. இதனால் பெனால்டி ஷூட்-அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இரு அணி வீராங்கனைகளும் அடித்த ஷாட்கள் கோல் வலைக்குள் செல்லவில்லை.

இந்நிலையில், சுவீடன் வீராங்கனை ஹர்டிங் அடித்த ஷாட்டை அமெரிக்க கோல் கீப்பர் தடுத்தார். ஆனால் மூன்றாம் நடுவர் பரிசீலனை செய்தபோது பந்து வலைக்குள் விழுந்திருக்கும் என்பதாலும், கோல் கீப்பர் கோட்டை தொட்டு பந்தை தடுத்ததாலும் அது கோல் என அறிவிக்கப்பட்டது. இதனால் சுவீடன் அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

இதனைத் தொடர்ந்து 11ஆம் திகதி நடைபெற உள்ள காலிறுதிப் போட்டியில் ஜப்பானை எதிர்கொள்கிறது சு;வீடன். தோல்வியுற்றதால் அமெரிக்க அணி உலகக்கிண்ணத்தை விட்டு வெளியேறியது. உலகக்கிண்ணம் போன்ற பெரிய தொடரில் அமெரிக்க அணி அரையிறுதிக்கு தகுதி பெற முடியாமல் வெளியேறியமை இது தான் முதல் முறை ஆகும்.

# பாக். கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு செல்ல அனுமதி

13ஆவது ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் இடம்பெறவுள்ளது.

இதில் மொத்தம் 10 நாடுகள் பங்கேற்கின்றன. இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் லீக் போட்டி ஒக்டோபர் 14ஆம் திகதி அஹமதாபாத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடக்கும் உலக கிண்ண கிரிக்கெட்டில் கலந்துகொள்வதை பாகிஸ்தான் உறுதிசெய்யாமல் இருந்து வந்தது. இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை இந்தியாவுக்கு அனுப்ப அந்நாட்டு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

வலய மட்ட போட்டியில் திறமையை வெளிப்படுத்தி கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாவடிப்பள்ளி அல்-அஷ்ரப் மகா வித்தியாலய மாணவர்களுக்கான கௌரவிப்பும், பதக்கம் அணிவிக்கும் நிகழ்வும் அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் வீ.எம்.ஸம் ஸம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.சாஜித் பிரதம அதிதியாகவும், காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.டேவிட் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தார். (படம் - மாவடிப்பள்ளி செய்தியாளர்)



தற்போது விற்பனையில்!
ஜூனியர் தமிழன் வழங்கும்
2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643

# மேற்கிந்திய மண்ணில் தடுமாறும் இந்தியா; இரண்டாவது ஆட்டத்திலும் வென்றது மே.இ.தீவுகள்




இந்திய அணியுடனான இரண்டாவது ரி20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணிகள் 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகளின் கயானாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய கிரிக்கெட் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. திலக் வர்மா மட்டும் நிலைத்து நின்று விளையாடி 41 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 152 ஓட்டங்கள் குவித்தது.

153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பொறுப்புடன் நிலைத்து நின்று விளையாடிய நிக்கோலஸ் பூரன், 40 பந்துகளில் 67 ஓட்டங்கள் குவித்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில் மேற்கிந்திய தீவுகள் அணி 18.5 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டை இழந்து 155 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை அடைந்தது.

அதனடிப்படையில் 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. மூன்றாவது ஆட்டம் இன்றிரவு 8.00 மணிக்கு நடைபெறும்.

# மாகாண மட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம்



குருக்கள்மடம் நிருபர்

டி.எஸ்.ஐ. நிறுவனம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 17 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் மட்/குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 6 அணிகள் தெரிவுசெய்யப்பட்டன. மாவட்ட ரீதியில் முதல் இடம், இரண்டாம் இடம் பெற்ற அணிகள் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றின. இப்போட்டியானது திருகோணமலை ரோயல் கல்லூரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7